பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்

# நகர்ப்புறப் பெண்களின் ஆற்றல் மிகுமை குறித்த பயிற்சி

## கையேடு



**தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்**

கோயம்புத்தூர்



பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்

# நகர்ப்புறப் பெண்களின் ஆற்றல் மிகுமை குறித்த பயிற்சி

## கையேடு

ஆக்கம் :

*நகராட்சி நிர்வாக ஆணையரகம்*

சென்னை

*பயிற்சி வடிவமைப்பு & செயலாக்கம்*

*தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்*

கோயம்புத்தூர்

© தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்
கோயம்புத்தூர் - 641 011

திருத்திய பதிப்பு : 2007

வெளியிடுவோர்

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்
203, அழகேசன் சாலை,
சாயிபாபா காலனி,
கோயம்புத்தூர் - 641 011
தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி : 0422-2441086,
நிகரி : 0422 - 2457404
மின்னஞ்சல் : tniuscbe@vsnl.net
இணையம் : tnius.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| 1. | இந்தியாவில் பெண்களுடைய சமூகப் பொருளாதார மற்றும் பண்பாட்டு நிலை. | 3 |
| 2. | மகளிருக்கான ஆற்றல் மிகுமை : தற்போதைய அணுகுமுறைகள், உத்திகள் | 47 |
| 3. | பெண்கள் மேம்பாட்டிற்கான திட்டங்கள். | 63 |
| 4. | சமூகநலத் திட்டங்கள். | 67 |
| 5. | வெற்றிக்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் பாக்கு மட்டை - மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் பார்வைக்கு ... | 78 |

# முன்னுரை

"வாய்ப்புக்கிட்டின் வானையும் எட்டுவாள் பெண்" என்ற வரியைக் கேட்கும் போதே தேகம் புல்லரித்து மனம் பூரிப்படைகிறது. நாட்டின் மக்கள் தொகையில் சரிபாதி அளவு கொண்ட பெண்களின் நிலை உயராவிடில், நம் நாட்டை வளர்ச்சியடைந்த நாடு என்று சொல்லிக்கொள்ள முடியாது. ஏனெனில் மனித வளத்தில் பெண்கள் பெரும்பகுதியாகவும் தன்னிகறற்றவர் -களாகவும் விளங்குகிறார்கள். இந்நிலையை மாற்றிட கிடைக்கும் வாய்ப்புக்களை தானே நாடிச்சென்று தன் அரிய முயற்சியால் தனது நிலையை மேம்படச்செய்ய ஒரு பெண்ணிற்கு கலங்கரை விளக்கெனத் திகழச்செய்யக் கூடிய ஒரு வழிகாட்டுதல் தேவை. பெண்ணின் தன்னம்பிக்கை உயர்ந்தால் பொருளாதார மேம்பாடு உயரும். அதன் மூலம் சமூக நிலை மேம்பாடு உயர்வது உறுதி.

இத்தகு நிலை ஒரு பெண்ணிற்கு அமைந்திட தன்னிடமே உள்ள பல்வேறு பண்புகளையும், திறமைகளையும், " சுய ஆய்வு" செய்து பட்டை தீட்டிய வைரமாக மிளிர பலவிதமான பயிற்சிகளை அளித்திட இந்த "சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா" (SJSRY) என்ற திட்டத்தின் கீழ் நகர்ப்புறப் பெண்கள் அனைத்து வகையிலும் மேம்பாடு அடைய, பயிற்சி பெறுவோர்களுக்கு இக்கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மகளிரைக் குழுவாக ஒன்று திரட்டி அவர்களுக்குப் பல்வேறு நிலையில் பயிற்சி அளித்துக் குழுக்களாக அவர்களை இயங்கவைத்து முன்னேற்றப்பாதையை வகுத்துக் கொடுக்கிறது.

நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்திட்டத்தின் மூலமும் தங்களுக்கு என்னென்ன வாய்ப்புகள் உள்ளன என்பதையும்,

சட்டத்தில் பெண்களுக்கான உரிமைகள் மற்றும் வழிமுறைகளையும் அறிந்து கொண்டு பெண்களை முன்னேற்றப்பாதையில் செலுத்த ஒரு தூண்டுகோலாக இக்கையேடு அமையும்.

தான், தனது வீடு என்ற எல்லையைத் தாண்டி, சுற்றியுள்ள சமூகப் பிரச்சனைகளைக் களைய முற்படக்கூடிய துணிவும், பயிற்சி பெற்றதன் விளைவாகச் சுய தொழில் செய்யக்கூடிய உயர்வும்,அதன்மூலம் வருவாய்ப் பெருக்கமும் கூடவே சேமிப்பும் ஒன்றாக இணைவதால் பொருளாதார மேன்மை பெறும் பெண்கள் ஆக்கமும், ஊக்கமும் பெற்று உற்சாகமாக செயல்பட தனித்திறமை பெறுவதற்கும்,அதிகாரத்தை பங்கிட்டுக் கொள்வதற்கும் சரியான முறையில் திட்டமிட்டு இப்பயிற்சிக் கையேடு தயாரிக்கப்பட்டள்ளது.

"வளரட்டும் பெண்ணின் திறமைகள்"

"ஒளிரட்டும் அவர்தம் மக்கள் வாழ்வு"

என்ற கூற்றை மெய்ப்படவைக்கும் வகையில் இக்கையேடு உறுதியாக மகளிர் எண்ணத்தில், செயலில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

"ஏட்டிலுள்ள எழுத்துகள் எல்லாம் பெண்கள் மேம்பாட்டிற்கே " என்ற கூற்றிற்கு இணங்க தனித்திறமை வாய்ந்த குழுவினரால் இக்கையேடு கவனமாகத் தயார் செய்யப்பட்டு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் பல்வேறு பயிற்சித்திட்டங்களின் கீழ், பெண்கள் மேம்பாடு குறித்த பயிற்சி அளித்துக் கொண்டு வருகிறது. இக்கையேடு, முக்கியமாக வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கையேட்டைத் தயாரிக்க உதவிய அனைவருக்கும் நன்றியினைக் கூறிக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் - 641 011

**ப. கனகசபாபதி**

**இயக்குநர்**

# 1. இந்தியாவில் பெண்களுடைய சமூகப் பொருளாதார மற்றும் பண்பாட்டு நிலை

மனித சமுதாயம் அறிவியல், தொழில்நுட்பம், தகவல் தொடர்பு, அரசியலமைப்பு, நிருவாகச் செயல்பாடு போன்றவற்றில் எத்தனையோ முன்னேற்றங்களை இன்று கண்டுள்ளது. ஆயினும், ஆண் - பெண் சமத்துவம் என்பது பெரும்பாலான நாடுகளில் தொலைதூரக் கனவாகவே இருக்கிறது. ஆண்களுக்கு இணையாக பெண்களை ஏற்க மறுக்கிற எண்ண வார்ப்பைக் (Mind Set) கொண்டதாகவும் உள்ளது. ஆண் - பெண் என்ற வேறுபாடு சமுதாயப் பொருளாதார நிலைகளில் புகுவதை நமது அரசியலமைப்புப் பேராணை தடுத்த போதிலும், சுதந்திரம் அடைந்து பொன் விழாவைத் தாண்டிய பின்னரும் கூட பெண்களுக்கு எதிரான வேறுபாடுகள் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும், அதாவது கல்வி, வீடு, வேலை, அரசியல் மற்றும் பிறவற்றில் வேறுபடுத்தப்படுகிறார்கள். முக்கியமாக, பெண்களைத் தற்சார்பு உடையவர்களாகவும், முடிவு செய்யும் ஆற்றலை உடையவர்களாகவும் ஆக்குகிற ஓர் உறுதியான கொள்கை மற்றும் திட்டங்களை அரசு கொண்டிருந்தாலும் கூட பெண்கள் இன்னும் ஒதுக்கப்பட்டவர்களாகத் தான் இருக்கிறார்கள்.

"பல நூற்றாண்டு காலமாக பெண்கள் நான்கு சுவருக்குள் இரண்டாம் தர மனிதர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். சமூகப், பொருளாதார மற்றும் அரசியல் பாகுபாட்டினைப் பல்வேறு நாடுகளில் சந்திக்கின்றார்கள். பெரும்பாலான நாடுகளில் ஆண்களோடு ஒப்பிடும் போது பெண்கள் மிகவும் தாழ்வான நிலையில் இருக்கிறார்கள். குடும்பங்களில் பெண்களுக்கு இரண்டாந்தர நிலையே தரப்பட்டுள்ளது. இது கல்வி மற்றும் திறமையை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புகளில் மட்டுமின்றி மனிதனின் அடிப்படைத் தேவையான உணவு, சுகாதாரம், மற்றும் உயிர் வாழ்வதில் கூட இருக்கிறது" என **நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் அமர்த்தியாசென்** கூறுகிறார்.

## ஐ. நா. சபையின் புள்ளி விபரப்படி

உலகில் ஆண் - பெண் இருவரும் சரிசமமான எண்ணிக்கையில் உள்ளனர்.

- ஆனால்,உலகின் மொத்தச் சொத்தில் 2/3 பங்கு வேலை பெண்களால் செய்யப்படுகிறது.
- உலக வருமானத்தில்1/10 பங்கு மட்டுமே பெண்கள் பெறுகிறார்கள்.
- உலகச் சொத்தில் நூறில் ஒரு பங்கே பெண்களுக்கு உள்ளது.

## பாலின விகிதம்

பெண்களுக்குச் சமுதாயத்தில் தரப்பட்டுள்ள நிலையையும் தகுதியையும் அளப்பதற்கு சில அளவுகோல்கள் உள்ளன. முக்கியமாக பாலின விகிதம், கல்வி அறிவு விகிதம் வேலைவாய்ப்பு, முடிவாற்றல் பதிவு வகிப்போர் எண்ணிக்கை போன்றவைகளைச் சொல்லலாம்.

ஒவ்வொரு 1000 ஆண்களுக்கு எத்தனை பெண்கள் என்றோ? அல்லது ஒவ்வொரு 1000 பெண்களுக்கு எத்தனை ஆண்கள் என்றோ? கணக்கிடுவது **(Sex Ratio)** எனப்படும். இந்தியாவில் ஆண்களும் பெண்களும் சமமாக நடத்தப்பட்டால், 100 ஆண்களுக்கு நாம் 105 பெண்கள் எதிர்பார்க்கவியலும்.

இந்தியாவில் பாலின விகிதத்தைக் கணக்கெடுக்கும் போது தொடர்ந்து பல ஆண்டுகாலமாக ஆண்களைவிட பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைந்து கொண்டே வருகிறது. இன்று முக்கியமாக, 6 வயதுக்குக் குறைவான குழந்தைளின் பாலின விகிதத்தைப் பார்க்கும்போது இன்னும் மோசமாக இருந்து வருகிறது.

### 2001 கணக்கெடுப்பின்படி

- இந்தியாவில் பாலின விகிதம் 933 / 1000 ஆகும்.
- தமிழ்நாட்டில் பாலின விகிதம் 986 / 1000 ஆகும்.
- இந்தியாவில் குழந்தை (0-6) பாலின விகிதம் 927 / 1000 ஆகும்.
- தமிழ்நாட்டில் குழந்தை (0-6) பாலின விகிதம் 939 / 1000 ஆகும்.

எனவே, தற்போதுள்ள இந்திய மக்கள் தொகையான 103 கோடியில், 52.8 கோடி பெண்கள் இருக்க வேண்டும். ஆனால், தற்போதுள்ள மக்கள் தொகையில் 48.6 கோடி பெண்கள் மட்டுமே இருப்பதாகக் கணக்கெடுப்புக் கூறுகிறது. அதாவது, ஏறத்தாழ 3.2 கோடி பெண்கள் இந்தியாவில்

காணாமல் போயிருக்கிறார்கள். உயிர் வாழ்வதற்கு வாய்ப்பு மறுக்கப்படுவதால், சில பெண்குழந்தைகள் பிறக்கவே இல்லை. பலர் இறந்துவிட்டனர். அதாவது, பிறக்கப்போகும் பாலினத்தைப் பரிசோதனை மூலம் அறிந்து பெண் கருக்கள் அழிக்கப்படுவதும், பெண் சிசுக் கொலை நடைபெறுவதும் இன்னும் பல்வேறு இடங்களில் நடந்தேறிவருகிறது.

## கல்வியில் பெண்களின் நிலை

உணவு, உடை, கல்வி, குழந்தை வளர்ப்பு போன்றவைகளில் ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும் பாகுபாடு காட்டப்படுகிறது. உலகமெங்கும் கல்விகற்ற ஆண்களோடு பெண்களை ஒப்பிடுகையில், கற்ற பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. ஆணாதிக்கத் தந்தை வழிச் சமுதாயத்தில், ஒடுக்கப்பட்ட மக்களிலும் கடைசி நிலையில் இருப்பவர்கள் பெண்கள் ஆவர்.

## கல்வி கற்றவர்கள்

| | பெண்கள் | ஆண்கள் |
|---|---|---|
| இந்தியாவில் | 54.1 % | 75.9 % |
| தமிழ்நாட்டில் | 64.55 % | 82.33% |

## வேலை வாய்ப்புகளில் பெண்களின் நிலை

நமது நாட்டில் 77% பெண்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். 46.2% பெண்கள் விவசாயக் கூலி வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், இந்தியாவில் பெண்களுக்கு விவசாயக் கூலி மிகக்குறைந்த அளவு அளிக்கும் மாநிலம் தமிழ் நாடே ஆகும்.

இந்தியாவில் பெண்கள் பாலின,வர்க்க, சாதி ஆகிய மும்முனைகளில் ஒதுக்கப்படுகிறார்கள்.

உலகில் அதிகநேரம் உழைப்பவர்கள் பெண்களாக இருப்பினும் கூட, ஒழுங்கமைக்கப்பட்ட துறைகளில் (Organised Sector) பணியாற்றும் பெண்களின் விகிதத்தைக் கணக்கிடும் போது மிகக் குறைவான பெண்களே பணியாற்றுகின்றனர். அதிலும் முடிவுசெய்யும் அதிகாரம் உள்ள பதவிகளில் பணியாற்றும் பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். விவசாயம், நெசவு மற்றும் கட்டிடக் கூலி போன்ற ஒழுங்கமைப்படாத துறைகளில் மட்டுமே பெண்கள் அதிக எண்ணிக்கையில் பணியாற்றி வருகின்றனர்.

## வேலை பார்ப்போர் விகிதம்

| வேலை பார்ப்போர் விகிதம் | பெண்கள் | ஆண்கள் |
|---|---|---|
| இந்தியாவில் | 22.3% | 51.6% |
| ஒழுங்கமைக்கப்பட்ட துறைகளில் வேலை பார்ப்போர் | 43.9 லட்சம் | 231.8 லட்சம் |
| இந்திய ஆட்சிப்பணி (IAS) | 10.4% | 86.6 % |
| இந்திய காவல் பணி (IPS) | 3.3% | 96.7 % |

பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 1952இல் 22 ஆக இருந்து, தற்போது 49 ஆக உயர்ந்திருக்கிறது. பாலியல் ஆற்றலாதல் அளவீட்டின்படி (GEM), பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் 8.9 % பெண்கள் இருக்கிறார்கள். 10.1 % பெண்கள் அமைச்சர்களாக இருக்கிறார்கள். கீழ் சபையில் (Lok Sabha) 8.8%, மேல் சபையில் (Rajya Sabha) 9.1 % ம் பெண்கள் இருக்கிறார்கள். இதே விகிதத்தில் சென்றால், மூன்றில் ஒரு பங்கு இடமான 33 % ஐ பெண்கள் அடைவதற்கு 75 ஆண்டுகள் ஆகும்.

## பாராளுமன்றத்தில் பெண் உறுப்பினர்களின் விகிதம்

| ஆண்டு | மொத்த இடங்கள் | பெண்கள் | விகிதம் |
|---|---|---|---|
| 1952 | 499 | 22 | 4.4 |
| 1957 | 500 | 27 | 5.4 |
| 1962 | 503 | 34 | 6.7 |
| 1967 | 523 | 31 | 5.9 |
| 1971 | 521 | 22 | 4.2 |
| 1977 | 544 | 19 | 3.4 |
| 1980 | 544 | 28 | 5.1 |
| 1980 | 544 | 28 | 5.1 |
| 1984 | 544 | 44 | 8.1 |
| 1989 | 517 | 27 | 5.2 |
| 1991 | 544 | 39 | 7.4 |
| 1996 | 545 | 36 | 6.6 |
| 1998 | 543 | 43 | 7.9 |
| 2001 | 545 | 47 | 8.6 |

## பெண்களின் அரசியல் பங்கேற்பைப் பாதிக்கும் காரணிகள்

1. குடும்பத்தின் நிலை.
2. வேலை வாய்ப்பு மற்றும் வருவாய்.
3. பணி சம்பந்தப்பட்ட உரிமைகள்.
4. இருமடங்கு பணிச்சுமை.
5. கல்வி மற்றும் எழுத்தறிவு.
6. ஆரோக்கியம் மற்றும் குடும்பக்கட்டுப்பாட்டுத் திறன்.
7. பொருளாதார வளங்களின் வாய்ப்பு.
8. சட்ட உரிமைகள்.
9. பாரம்பரியம், கலாச்சார மனப்பாங்கு மற்றும் மதம்.
10. சமூகத்துடன் பழகுவது மற்றும் தன்னம்பிக்கை.

## பெண்களுக்கு எதிரான வன்முறை

பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நிகழ்வாகப் போய்விட்டது. சாதி, மத, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து அனைத்து நிலைகளிலும் பல்வேறு வடிவங்களிலும் பெண்களுக்கு எதிராக நடக்கிற ஒரு சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

இந்தியாவில்

- 54 நிமிடங்களுக்கு ஒரு பெண் கற்பழிக்கப்படுகிறாள்.
- 26 நிமிடங்களுக்கு ஒரு பெண் தொந்தரவு **(Molested)** செய்யப்படுகிறாள்.
- 51 நிமிடங்களுக்கு ஒரு பெண் கேலி செய்யப்படுகிறாள்.
- 102 நிமிடங்களுக்கு ஒரு பெண் வரதட்சணை சாவிற்கு ஆளாகிறாள்.
- 7 நிமிடங்களுக்கு ஒரு பெண்ணுக்கு எதிரான குற்றம் நிகழுகிறது.

*- எனத் தேசிய மகளிர் ஆணையத்தின் புள்ளி விவரம் கூறுகிறது.*

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பெண்களுக்கான பாதுகாப்பு

இந்திய அரசியலமைப்புச் சட்டமானது அனைத்துப் பெண்களுக்கும் பின்வரும் சமத்துவ உத்திரவாதங்களை அளிக்கின்றது.

- சட்டத்தின் முன் அனைவரும் சமம். **பிரிவு 14**
- மத, இன, சாதி, பாலின, பிற அடிப்படையில் எவ்விதப் பாகுபாடும் கூடாது. **பிரிவு 15(1)**
- பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் தனிச்சலுகைகளை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும் என்கிறது. **பிரிவு 15(3)**
- அனைத்துக் குடிமக்களுக்கும் வேலையில் சம வாய்ப்புகள் அளிக்க வேண்டும் **பிரிவு 16**
- உயிர்வாழ்வதற்குப் போதுமான தேவைகளை நிறைவு செய்வதற்காக அரசுத் திட்டங்கள் அமைய வேண்டும். **பிரிவு 39 (a)**
- ஆணுக்கும் பெண்ணுக்கும் சமவேலைக்குச் சம ஊதியம் வழங்க வேண்டும். **பிரிவு 39 (d)**
- குழந்தைப் பேறு விடுப்பு அளிக்க வசதி. **பிரிவு 42**
- பெண்களின் மாண்புக்கு இழிவு ஏற்படும் எவ்வித நடைமுறையையும் கைவிட வேண்டும். **பிரிவு 51 (A) (c)**

ஆனால் நடைமுறையில் இந்தச் சமத்துவம் இருக்கிறதா? பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகிறதா? என்றால் இல்லை என்பதே பதில். சமூக அமைப்பு முறை மற்றும் பண்பாட்டினால் ஏற்பட்டுள்ள தவறான எண்ணம் காரணமாக மேற்கண்ட சட்ட உரிமைகளைப் பெண்களால் அனுபவிக்க முடியவில்லை. எனவே பெண்கள் இன்னும் உண்மையான, செயற்பாட்டு அளவிலான சமத்துவத்தை, அதாவது சமானமான நிலையை அடையவில்லை என்பதே இதிலிருந்து தெரியவருகிறது.

## பாலியல் கருத்துக் கொள்கை (Gender Ideology)

குழந்தை பிறந்தவுடன் வழக்கமாக கேட்கப்படும் முதல் கேள்வி : ஆணா? பெண்ணா? என்பதே. உடற்கூறுகளின் வேறுபாடுகளைக் கொண்டு ஆண் குழந்தை என்றும் பெண் குழந்தை என்றும் பிறந்தவுடன் குழந்தையை அடையாளம் காண்பதோடு நின்றுவிடுகிறோமா? அதுதான் இல்லை.

நாம் பிறப்பதற்கு முன்பே சமுதாயத்தில் ஆண், பெண் என்று இருப்பவர்கள் வேற்றுமைப்படுத்துவதற்கு உடல்கூறுகள் தவிர, எண்ணற்ற அடையாளங்களை உருவாக்கியுள்ளோம். எண்ணங்களில், செயல்களில் பாவனைகளில், வாழும் முறைகளில் ஆண்களிடமிருந்து பெண்கள் வேறுபட்டவர்கள் என்று வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு கணத்திலும் காட்டப்படுகின்றனர். பேச்சு, நடை, உடை,சிரிப்பு, மொழி, சாப்பாட்டின் தரம், படிப்பு, தொழில் குடும்ப உறவுகள், வெளியுலக அனுபவங்கள், சமுதாய மதிப்புகள், பழக்கவழக்கங்கள், பொருளாதார நிலை, அரசியல் பங்கு என்று அனைத்துச் செயல்களிலும் ஆண்களுக்கென்று ஒரு வரைநிலையையும், பெண்களுக்கென்று ஒரு வரைநிலையுமாக சமுதாயம் இரு கூறாக வகுத்துள்ளது. இருபாலரும் வெவ்வேறு ஆதிக்க நிலை "ஆண்" என்ற பிறப்பினால் உயர்வானதென்று கணிக்கப்படுகிறது. இதன்படி ஆண்கள் உயர்வான மதிப்பைச் சமுதாயத்தில் பெறுகின்றனர்.

இம்மதிப்பீடுகளின்படி ஆண், பெண் இருபாலரும் வெவ்வேறு பொறுப்புகளையும், செயல் பங்குகளையும், சமுதாயத்தில் ஏற்கும் வண்ணம் பிறந்தது முதல் வளர்க்கப்படுகின்றனர். இவ்வேறுபாடுகள் இயற்கையே என்ற நினைவு காலப்போக்கில் வேரூன்றிவிடுகிறது. உயர்வு தாழ்வு வேறுபாடுகளை இயற்கை எனக்கொள்வதால், அவைபற்றிய வினாக்கள் எழுப்புவதோ வேறுபாடுகளை அடையாளம் கண்டு அவற்றைக் களைய முயலுவதோ,இயற்கை மீறல்களெனவும், சமூக விரோதச் செயல்களெனவும் கணிக்கப்படுகின்றன.

## ஆண் வழிச்சமுதாயம் (Patriarchy)

இந்தியா மட்டுமல்லாது உலகில் உள்ள பல்வேறு சமுதாயங்களிலும் பரவலாகக் காணப்படுகின்ற ஒரு சமூக அமைப்பு முறை ஆண்வழிச் சமுதாயமாகும். இந்த அமைப்பு முறையில் ஒரு மனிதன் எந்தக் குறிப்பிட்ட சமூகத்தை அல்லது குழுவைச் சார்ந்தவர் என்ற அங்கீகாரம் வழங்கப்படுகிறது. அவர் எந்தப் பரம்பரை அல்லது காழ்வழியைச் சேர்ந்தவர் என்பதை அந்தச் சமுதாயம் தீர்மானிக்கிறது. அந்தப் பரம்பரையினுடைய தோற்றம் ஒரு ஆணை மையமாகக் கொண்டு அமைக்கப்படும் முறைதான் ஆண்வழிச் சமுதாயம். ஆகவே அந்தச் சமுதாயத்தில் ஒரு ஆண் குடும்பத் தலைவராகவும், வாரிசுதாரராகவும், சொத்தில் பங்கு பெறும் பங்காளியாகவும் கருதப்பட்டு, உயர்ந்தவராகவும் கருதப்படுகிறார். ஆண்வழிச் சமுதாயத்தில் ஆண்களுக்கு முதன்மை இடம் கொடுக்கப்பட்டுப் பெண்கள் அவர்களைச் சார்ந்து செயல்படவேண்டிய முறையில் அமைக்கப்பட்டு, அவர்கள் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுகின்றார்கள். ஆண்வழிச் சமுதாயத்தில் அசையும் மற்றும் அசையாச்சொத்துகள் ஆண்கள் பெயரிலும், வருமானம் ஈட்டுபவர்களாகவும்,பெண்களையும், குழந்தைகளையும், வயதானவர்களையும் காப்பாற்றுபவர்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். இத்தகைய சமுதாயத்தில் பெண்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கு எந்த ஒரு மதிப்பும் அளிக்கப்படாமலும் அவர்களுடைய திறமைகளை வளர்த்துக்கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படாமலும் ஆண்களுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்ற கட்டாயத்திற்குத் தள்ளப்படுகின்றனர். இத்தகைய சமுதாயத்தில்தான் பெண்களைப் பழித்துக்கூறும் வகையில் பல்வேறு புராணங்கள், கட்டுக்கதைகள், மற்றும் தெய்வவழிபாடுகளும், இயற்றப்பட்டுள்ளன. பெண்களைப் பழிக்கும் சடங்குகள், சம்பிரதாயங்கள், உதாரணமாக பலதார மணம், குழந்தைமணம், உடன்கட்டை ஏறுதல் போன்றவை அங்கீகரிக்கப்பட்டு அவை தலைமுறை தலைமுறையாகக்

கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. ஆண்வழிச் சமுதாய அமைப்பில் ஆண்கள் உயர்ந்தவர்களாகக் கருதப்படுவதோடு எண்ணங்களும் குழந்தைப்பருவத்திலிருந்தே ஊட்டப்படுகிறது. பெண்களும் அத்தகைய பாலின அடிப்படையிலான தாழ்ந்த உணர்வுகளை ஏற்றுக்கொள்ள சமூகமயமாக்கப்படுகிறார்கள். ஆண்வழிச் சமுதாயத்தில் மட்டுமே ஆண் பெண் வேறுபாடு அங்கீகரிக்கப்பட்டு ஆண், பெண் சமமற்ற நிலையில் போற்றப்படுகிறது. ஆகவேதான் பெண்களை ஆற்றல் மிக்கவர்களாக ஆக்கவேண்டும் என்றால் அடிப்படையில் சமுதாயத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும். ஆண்வழிச் சமுதாய அமைப்புக்கு மாற்றான அமைப்பை உருவாக்குவதன் மூலம் பாலின பாகுபாட்டை அகற்றுவதோடு வேலையில் பாலின வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்க இயலும். ஆணும் பெண்ணும் இணைந்து செயல்படுகின்ற முறையிலும் இருவருக்கும் சமமாக தகுதியும் பங்கும் கொடுக்கப்படும் நிலையில் இருபாலருக்கும் சமமாக நீதி கிடைக்கும்.

## உடற்கூற்று முடிவுக் கொள்கை

ஆண் - பெண் சமுதாய உறவுகளில் பெண்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். எவ்வளவு திறமைகள் பெண்களிடம் இருந்தாலும், பிறப்பினால் பெண்கள் என்பதால் அதாவது உடற்கூறுகளில் ஆண்களிடமிருந்து வேறுபடுவதால் பெண்களைத் தாழ்ந்தவர்கள் என்று சமுதாயம் கருதுகிறது. வாழ்க்கையில் ஒவ்வொரு கோணத்திலும், நிலைகளிலும், செய்யும் வேலைகளிலும், எண்ணங்களிலும் பாதிக்கப்படுகிறார்கள். இப்படித்தான் ஆண்கள் இருக்க வேண்டும், இப்படித்தான் பெண்கள் இருக்க வேண்டும் என்று உடலியலை வைத்து முடிவுக்கு வரும் தவறான முடிவினை உடற்கூற்று (Biological Determinism) முடிவுக் கொள்கை என்பர்.

## ஒருபடித்தான பாலியல் பிரிவுகள் (Gender Stereo - Types)

ஆண், பெண் இருவரும் பிறப்பினால் ஆதிக்க நிலைகளில் வேறுபட்டவர்கள் என்று விளக்குகிறது "உடற்கூற்றின் முடிவு"க்

கோட்பாடு. இது மிக ஆழமான, வெளிப்படையான, மறைவான தாக்கங்களை மனித வளர்ச்சியில் ஆண்களிடமும், பெண்களிடமும் ஏற்படுத்திவிடுகின்றது. மனிதக் குணங்களை இரண்டு துண்டுப் பிரிவுகளாக, எதிர்மறையான குணங்களாகப் பிரித்து ஆண்களின் செயல்களும் குணங்களும் பெண்களின் குணங்கள் செயல்களிலிருந்து வேறுபட்டவை என்றும் அத்துடன் இருபாலரும் இயற்கையாகவே வெவ்வேறு செயல்பாடுகளுக்கு ஏற்றவர் என்றும் கொள்கிறது. இதனால், மனிதக் குணங்கள் ஆண்குணம் (Masculinity), பெண்குணம் (Femininity) எனும் இரு வகை மாறாப் பாலினங்களாகப் பிரிக்கப்படுகின்றன.

பாலினப்படினங்கள் பற்றி 25 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வில் ஆண் பெண் குணங்களைச் சித்திரிக்க ஒரே மாதிரியான சொற்களைப் பயன்படுத்தி வருவது தெளிவாகிறது. ஆண் மற்றும் பெண்ணின் பண்புகளாக 25 நாடுகளில் கூறியவற்றைப் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இதில் ஆண்களுக்குத் தொடர்புடையனவாக 45 பண்புகளும், பெண்களுக்குத் தொடர்புடையனவாக 25 பண்புகளும் கண்டறியப் பட்டன. எடுத்துக்காட்டாகச் சில பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்களுக்குத் தொடர்புடையன | பெண்களுக்குத் தொடர்புடையன |
|---|---|
| சுறுசுறுப்பு | அன்பு |
| துணிச்சல் | இரக்கம் |
| முரட்டுத்தனம் | கவர்ச்சி |
| மன உறுதி | அழகுணர்ச்சி |
| ஆதிக்க உணர்வு | உணர்ச்சி வயப்படுதல் |
| புத்திக்கூர்மை | கனவுணர்வு |
| முன்னேறும் ஆசை | சார்ந்திருத்தல் |
| தெளிவான சிந்தனை | கூச்ச சுபாவம் |
| தன்னம்பிக்கை | அதிகப்பேச்சு |
| பகுத்தறிவு | சந்தர்ப்பவாதம் |

இவ்வாறு இரு வேறு பண்புக்கூறுகளை ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொருந்திப் பார்த்து அவற்றையே சமூகம் எதிர்ப்பார்கிறது. இப்பண்புக்கூறுகளின் அடிப்படையில் ஆண்மை, பெண்மை என்ற பாலியலை உருவாக்கி ஆண்களை உயர்வாகவும், பெண் களைத் தாழ்வாகவும், ஆண்களை அதிக சக்தியாகவும், பெண்களை அடங்கியிருப்பவராகவும், சார்ந்திருப்பவராகவும் ஆக்குகிறது. மேலும் அதற்கேற்ப வேறுபட்ட பங்குகளையும், தகுதிகளையும் அவர்களுக்கு அளிக்கிறது.

## பொருள்மயப்படுத்தல் மற்றும் நுகர்வுப்படுத்தல் (Objectification and commoditization)

பெண்ணைக் குறைத்து மதிப்பிடுவதால் ஆண்கள் சக்தி மிக்கவர்களாகவும் பெண்கள் வெறும் உயிரற்ற பொருளாக அடங்கி நடப்பவர்களாகவும் மட்டுமே பார்க்கப்படுகின்றனர். பெண்களைப் பாலுணர்வைத் தூண்டும் பொருளாகப் பார்க்கின்றனர். பெண் என்பவளும் ஒரு பிறவி. அவளுக்கும் உயிர் இருக்கின்றது. உணர்வு இருக்கின்றது என் பதை மறந்து விடுகின்றனர்.

இவ்வாறு பொருளாக மட்டுமே பார்ப்பதால்தான் கேலி செய்தல், (Eve Teasing) கட்டாய விபச்சாரம், சிறைப்படுத்துதல், கற்பழிப்பு, பாலியல் வன்முறை போன்ற கொடுமைகள் நடக்கின்றன. மேலும், பெண் வரதட்சணை பெறுகிற பண்டமாற்றுப் பொருளாக, விளம்பரங்களில் அழகுப் பதுமைகளாக வியாபாரப் பொருளாக பார்க்கப்படுகிறாள். நடத்தப்படுகிறாள்.

எனவே, மனிதன் என்ற நிலையில் பெண்ணுக்குச் சமத்துவ உரிமை வழங்கப்பட வேண்டும். குடும்ப நிருவாகத்தில் பங்கு பெறும் உரிமை, முடிவெடுக்கின்ற உரிமை, தன் கருத்தைக் கூறுகின்ற பேச்சுரிமை போன்றவற்றை அவள் பெற வேண்டும். அதே வேளை அவளுக்குத் தன் அடையாளத்தைக் காப்பாற்றிக்கொள்கின்ற உரிமையும் வேண்டும்.

## பாலினமும் பாலியலும் (Sex Vs. Gender)

ஆண், பெண் இருபாலரிடையே காணப்படும் வேறுபாடுகள் உடற்கூற்றின் அடிப்படையில் பிறப்பிலேயே அமைந்த இயற்கை என்பதைப் பாலினக் கொள்கை எனக் கருதினால், இவ்வேறுபாடுகள் சமுதாயத்தினால் பல வகைகளில் உருவாக்கப்பட்ட செயற்கை வேறுபாடுகளே எனக் கொள்வதற்குப் பாலியல் என்று பெயர். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் இப்படித்தான் ஒரு ஆணோ, பெண்ணோ வளர வேண்டும், செயல்பட வேண்டும் என்று வேறுபட்ட நியதிகளை இருபாலருக்கும் உருவாக்கி, அவரை அவ்வாறே வளர்த்தும், இந்நியதிகள், வரையறைகளின் (Scripts) படி வளர்பவரை வாழ்த்தியும், மாறாக நடப்பவரைக் கண்டித்தும் செயற்கையாக பால் வேறுபாடுகளை இச்சமுதாயம் உருவாக்குகிறது என்று பாலியல் சுட்டிக்காட்டுகிறது.

பாலினத்தை இயற்கை என்று கொள்வதால் அது ஒரு முடிவாக மாறாத் தன்மையை ஏற்கிறது பெண்கள் குடும்பம். மகப்பேறு, பராமரிப்பு என்ற வேலைகளை மட்டுமே திறம்படச் செய்ய இயலும். ஆண்கள் செய்யும் பிற வேலைகளுக்குள் பெண்கள் நுழைவது இயற்கைக்கு மாறானது என்று பாலினம் வலியுறுத்துகிறது.

ஆண் பெண் வேறுபாடுகள் சமுதாயத்தால் உருவான வேறுபாடுகள் என்பதால் ஏற்ற யுத்திகளைக் கையாண்டு பெண்களின் நிலையை மாற்ற இயலும் என்று பாலியல் நம்பிக்கை தருகிறது.

பாலினத்திற்கும் பாலியலுக்கும் உள்ள வேறுபாடு என்பது உயிரியலுக்கும் சமூகவியலுக்கும் உள்ள வேறுபாடு போன்றது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே உடல் ரீதியாக மாறுபாடுகள் உள்ளன. அதாவது, பெண்களால் குழந்தை பெறவியலும். அதற்கேற்ப கர்ப்பப்பை உள்ளது. மாதவிடாய் பருவ மாற்றத்தில் தொடங்கி குறிப்பிட்ட வயதில் முடிவடைகிறது. அதுபோலவே, ஆண்களுக்குக் குறிப்பிட்ட வயதில் குரல்வளை உடைந்து குரல் மாறுகிறது. மீசை முளைக்கிறது.

இவ்வாறு ஆணையும் பெண்ணையும் உடலியல்ரீதியாக உயிரியல் ரீதியாக வேறுபடுத்திப் பார்ப்பது பாலினம் எனலாம். அதே ஆணை அல்லது பெண்ணைச் சமூக ரீதியாக, பண்பாடு ரீதியாகப் பார்ப்பதுதான் பாலியல் எனப்படும். இது ஆண் மற்றும் பெண்ணை மட்டுமே குறிப்ப தன்று. அவர்களுக்கு இடையிலான உறவுகள், பாங்குகள், தகுதிகள் எவ்வாறு என்று சமூக ரீதியாக உருவாக்கப்படுகின்றன என்பதைக் குறிப்பதாகும். எனவே, பாலியல் எனப்படுவது உயிரியல் அடிப்படையில் அல்லது சமூகம் மற்றும் பண்பாட்டினால் உருவாக்கப்பட்ட, ஆண்களிடமிருந்து பெண்களை வேறுபடுத்திக்காட்டு கின்ற நிலைத்த குணங்கள், பங்குகள் மற்றும் நடத்தை முறைகளைக் குறிப்பதாகும்.

| *பாலினம்* | *பாலியல்* |
|---|---|
| பாலினம் இயற்கையான உடல் கூறுகளின்மேல் விளக்கப்படுகிறது. | பாலியல் சமூக, பண்பாடு சார்ந்தது சமூகத்தால் உருவாக்கப்பட்டுக் கற்பிக்கப்படுகிறது. |
| பாலினம் என்பது உயிரியல் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது. வெளிப்படையாகத் தெரிகிற பாலினக்குறி மற்றும் குழந்தைப்பேறு ஆகிய செயல் வேறுபாட்டினைக் குறிக்கிறது. | பாலியல் சமூக அடிப்படையில் உருவாக்கப்படுகிறது. சமூக உளவியல் ரீதியாக நிர்ணயிக்கப்படுகிறது. பாலியலை உருமாற்றம் செய்கிறது. |
| மாறக்கூடியதன்று | மாறக் கூடியது. பண்பாடு சார்ந்தது |
| பாலினம் நிலையானது. எங்கும் ஒரே மாதிரியானது | பாலியல் காலத்திற்குக் காலம் பண்பாட்டிற்குப் பண்பாடு குடும்பத்திற்குக் குடும்பம் மாறி வருகிறது. |

இந்த வேறுபாடுகள் - பாலியல் வேறுபாடுகள் ஆகும். அவை சமூகத்தால் உருவாக்கப்பட்டவை. பாலியல் ஒரு பண்பாடு மற்றும் சமூகவியல்பு இயற்கையான ஒன்றல்ல என்பதே உண்மை. எப்போதும்

மாறிக்கொண்டே இருப்பதாகும். காலத்திற்குக் காலம் இடத்திற்கு இடம் மற்றும் சமூகத்திற்குச் சமூகம் பாலியல் கோட்பாடு மாறுபடுகிறது. உதாரணத்திற்கு, ஒரு நடுத்தர வகுப்புப் பெண் பள்ளியில் படிக்கலாம் அல்லது வீட்டில் இருக்கலாம். ஆனால் ஒரு மலைசாதிப் பெண் காடு முழுவதும் சுதந்திரமாக சுற்றித் திரிகிறாள். மேய்ச்சலுக்கு விலங்குகளைக் கொண்டுசெல்கிறாள். பழங்களுக்கு இலைதலைகளுக்கு மரங்களிலில் ஏறுகிறாள்.

அவர்கள் இருவரும் பெண்கள்தான் என்றாலும் வெவ்வேறு சூழல்களில், வெவ்வேறு திறமைகள், விருப்பங்கள், கனவுகளுடன் வளர்க்கப்படுகிறார்கள். ஆனால் இருவரது உடல் அமைப்பும் ஒன்றுதான். அதுபோலவே பெரும்பாலான குடும்பங்களில் பெண் குழந்தைகள் முன்பு பள்ளிகளுக்கு அனுப்பப்படாமல் இருந்தனர். 10-11 வயதானவுடன் வீட்டிற்கு வெளியே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. வயதிற்கு வந்தவுடன் திருமணம் முடித்தனர். ஆனால் தற்போது காலம் மாறிவிட்டது. அதுபோலவே ஆணின் கல்வி மற்றும் பொறுப்புகளில் மாற்றங்கள் வந்துள்ளன. எனவே பாலியல் என்பது மாறக்கூடியது என்பது உண்மையாகிறது.

பாலியல் என்பது பண்பாடு சார்ந்தது. இது பண்பாட்டிற்குப் பண்பாடு மாறுபடுகிறது. மேலும் ஒரே பண்பாட்டிற்குள்ளும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மாறுபடும். பண்பாடு நிலையானதன்று; மாறிக் கொண்டிருக்கும், ஆண்கள் மற்றும் பெண்களின் பண்புகள் பண்பாட்டினால் மட்டுமன்றி சமூக- அரசியல் மற்றும் பொருளதாரக் காரணிகளாலும் தீர்மானிக்கப்படுகிறது.

## பெண்களை எவ்வாறு ஆற்றல் படுத்துவது?

- பெண்ணால் மாற முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது.
- எந்த விதமான வேலைகளிலும் ஆண்களுடன் பெண்கள் போட்டியிட்டு வெல்லமுடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது.

- தங்களது சூழ்நிலை தொடர்பான விழிப்புணர்வைப் பெண்களிடையே வளர்த்தல்
- பெண்களுக்குப் பலவிதமான விருப்பு வெறுப்புகளை ஏற்படுத்தி உதவுதல்
- பெண்களிடையே வலிமை - ஆற்றலை உருவாக்குதல்
- பிறருடன் தொடர்புகள் மற்றும் இணைப்புகளை அதிகரித்தல்
- பெண்களுக்கு ஏற்றதொரு சூழ்நிலையை உருவாக்குதல்
- போதுமான திறன் பயிற்சி வழங்குதல்

## மேலும் பின் வரும் பயிற்சிகளை அளித்தல்

- அடிப்படைத் திறன் வளர்த்தல் பயிற்சி.
- பிறருடன் தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ள பயிற்சி.
- சமூதாய பொருளாதார மேம்பாட்டுத் திறன்களில் பயிற்சி.
- நல்ல பழக்க வழக்கங்களில் பயிற்சி.
- மனதளவிலான மாற்றம் ஏற்பட பயிற்சி.

## மகளிர்கான சர்வதேச அளவிலான சட்ட உரிமைகள்

பெண்களின் மாண்பை உயர்த்துவது மற்றும் அனைத்துத் துறைகளிலும் பெண்களுடைய தேவைகளைப் பாதுகாப்பது அவசியம் என்று உணர்ந்த ஒரு சில முற்போக்கான நாடுகளில் இந்தியாவும் ஒன்று. பெண்களுக்கான ஆதரவுக்கரம் நீட்டுவது இந்தியாவின் முக்கிய நோக்கம். புதிய சட்டங்களை இயற்றுவதன் மூலமும் ஏற்கெனவே இருக்கின்ற சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவருவதன் மூலமும் பெண்களுக்கான முக்கியத்துவம் வெளிப்படுகிறது. பெண்களை ஆற்றல் மிக்கவர்களாக ஆக்குவதற்குச் சட்டம் ஒன்றே வழி. ஏனென்றால், சட்டத்தின் மூலமே பெண்கள் தங்களை வழி நடத்திக்கொள்வதற்குரிய உரிமைகளையும்

சுதந்திராக சிந்திப்பதற்கும் உரிய உரிமைகளைப் பெறுகின்றனர். அனிதாசென்னின் கூற்றுப்படி, "சட்டம் என்பது பல்வேறு அநீதிகளையும், பிரச்சனைகளையும் கலைவதற்கான ஒரு முக்கிய கருவி." வெறும் சட்டங்கள் மூலமே எதிர்பார்த்த மாற்றங்களும் பெண்களுடைய நிலையில் எதிர்பார்த்த மேன்பாடுகளும் வருவதில்லை. ஆனால் இந்தச் சட்டங்களை உரிய அமலாக்கம் செய்வதன் மூலம் அமல்படுத்துவதால் மட்டுமே இத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்த முடியும். மத்தியில் பாராளுமன்றம், மாநில அளவில் சட்டசபை போன்ற அமைப்புகளில் சட்டங்களை உருவாக்கி, அவற்றை நிறைவேற்றுகின்றனர். இவற்றின் தொடர்ச்சியாக சட்டங்கள் தீவிரமாக அமலாக்கப்படுவதற்கு நீதிமன்றம், காவல்துறை அதனோடு தொடர்புடைய பல்வேறு செயலிகள் உள்ளன. ஆகவே பாலின நிகர்நிலை என்பது வெறும் கொள்கை அளவில் மட்டும் இல்லாமல் சட்டங்கள் மூலமாக உண்மையாக்கப்படவேண்டும். பாலின நீதி என்பது சமூக நீதியோடு பின்னிப்பிணைக்கப்பட்டது. ஏனென்றால் குறிப்பாக நமது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலும் உலக நாடுகளிலும் மகளிருக்கான சட்ட உரிமைகள் மனித உரிமைகளோடு ஒரு பகுதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கியநாடுகளின் சபைபோன்ற பல்வேறு சர்வதேச நிறுவனங்களின் முக்கிய குறிக்கோளான பெண்களுக்கான சட்ட உரிமைகள் (குறிப்பாக 1940 ஆம் ஆண்டு முதலே தோன்றிய இந்த கருத்து) நான்காவது ஐக்கிய நாடுகளில் பெண்களுக்கான மாநாட்டில்தான் பெய்ஜிங்கில் நடைபெற்றபிறகு மிக முக்கியமாக அடைந்துள்ளது. ஏனென்றால் இம்மாநாட்டில்தான் மகளிர்க்கான சட்ட உரிமைகள் மனித உரிமைகளாக ஆமோதிக்கப்பட்டது. 1995 ல் நடைபெற்ற இந்த மாநாட்டில் உலகத்தில் உள்ள அனைத்துப் பெண்களுடைய துன்பங்களும் அவர்கள் சுரண்டப்படுதலும் முன்னிருத்தப்பட்டன. இந்த மாநாட்டில்தான் பெண்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அவற்றை உயர்த்துவதற்கும் பல்வேறு சட்ட வழிமுறைகள் திட்டமிடப்பட்டன.

ஏனென்றால் மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் மனித உரிமைகளும் அடிப்படை சுதந்திரம் பெறுவதும் அவர்களுடைய பிறப்புரிமையாகும் என்று கருதப்பட்டது. எனினும் பெண்களுக்கு மனிதஉரிமையை உயர்த்துவதும், பெண்களுடைய அடிப்படை சுதந்திரத்தைப் பாதுகாப்பதும் ஒரு ஜனநாயகஅரசின் முழுமையான பொறுப்பாகும். அனிதாசென்னின் கூற்றுப்படி மெக்சிக்கோ முதல் பெய்ஜிங்கின் மாநாடு வரை இரண்டு பத்தாண்டுகள் கடந்திருந்த போதிலும் இது மகளிரின் பிரச்சனைகளிலிருந்து தொடங்கி மகளிர்க்கான உரிமை நோக்கி நடைபோட்டு இறுதியாக மகளிருடைய அணுகுமுறையை அடக்கிய ஒரு மாபெறும் சமூக வரலாறுபடைத்த ஓர் இயக்கமாக இருந்து வந்துள்ளது. இதுவே மனிதமேம்பாட்டின் அணுகுமுறையின் மறுவடிவம்.

## சர்வதேச அளவிலான பெண்களுக்கான சட்ட உரிமைகள்

23 வல்லுநர்களைக்கொண்ட ஒரு குழுவை ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்தியது. அதன் பெயர் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளைக் கலைந்து எடுக்கும் குழு (CEDAW). இவ்வல்லுநர்கள் தங்களுடைய சுயதிறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்கள் அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல. உலகம் முழுவதும் கடைபிடிக்க வேண்டிய சட்ட உரிமைகளைத் திட்டமிடுவதற்கும் வழிகாட்டுதலுக்கும் இக்குழுவே பொறுப்பானது. பெண்களுக்கான உரிமைகள் கோரி 1946 ஆம் ஆண்டு 45 அங்கத்தினர்களைக் கொண்ட பெண்களின் நிலைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் நோக்கங்களாவது.

1. அரசியல், சமூக, பொருளாதாரம் மற்றும் கல்வித் துறைகளில் பெண்களுக்கான உரிமைகளை உயர்த்துதல்.
2. உடனடி கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய பெண்களுக்கான பிரச்சனைகளுக்குத் தகுந்த பரிந்துரை செய்தல்.

3. கீழ்க்கண்ட அணுகுமுறைகளைப் பின்பற்றியது

- உலகம் முழுவதும் உள்ள பெண்களின் நிலையைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து அவற்றை ஆய்வு செய்தல்.
- அதன் அடிப்படையில் மேம்பாட்டுத் துறைகளில் பெண்களின் பங்கு உள்ளிட்ட பல்வேறு கூறுபாடுகளைப் பற்றிய அறிக்கையைத் தயாரித்து அதற்குரிய பரிந்துறைகளைச் செய்தது. ஆகவே சர்வதேச அளவிலான பெண்களுக்குரிய உரிமைகளை உறுதிப்படுத்தும் சட்டங்கள் இயற்றும்போது கீழ்க்கண்ட கருத்துக்களின்அடிப்படையில் அமைந்தது.

  1. அடிப்படை மனித உரிமைகள்.
  2. மனிதர்களின் மாண்பு மற்றும் மதிப்பை மதித்தல்.
  3. ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான உரிமைகள், எந்தவித பாகுபாடற்ற உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை உரிமையாக்குதல்.

சீடா குழுவின் அடிப்படைக் கொள்கையானது என்னவென்றால் பெண்களுக்கு எதிரான பாகுபாடு என்பது மனிதகுல மாண்போடும் குடும்பம் மற்றும் சமுதாய நலத்தோடும் ஒத்துப்போகாமல் உள்ளது. அனைத்து வாழ்வியலும் பெண்களின் பங்களிப்பைத் தடுப்பதாக பாலினப்பாகுபாடு அமைகிறது. மேலும் பெண்களின் முழு திறமைகளின் மேம்பாட்டுக்குப் பாலினப்பாகுபாடு ஒரு தடைக்கல்லாக இருக்கிறது. குறிப்பாக நாட்டுக்கும், சமூகத்திற்கும் பெண்கள் செய்யும் சேவையைத் தடுப்பதாக உள்ளது. ஆகவே பாலின சமத்துவம் பொதுப்படையாக அங்கீகரிக்கும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். ஏனென்றால் ஒரு நாட்டின் முழுமையான மேம்பாடு உலகத்தின் மக்களின் நலம், மற்றும் உலக அமைதி இவையனைத்தும், பெண்களின் அதிகபட்ச பங்களிப்பைப் பொறுத்தே அமைகிறது. ஆகவேதான் சீடாகுழு பாலினப் பாகுபாட்டை இவ்வாறு வரையறுக்கிறது.

அனைத்துத் துறைகளிலும், ஆண் பெண் அடிப்படையிலான சமத்துவம், மனித உரிமைகள் மற்றும் உளவியலான சுதந்திரத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையிலோ அல்லது மகளிர்க்காக அங்கீகாரம், அனுபவிக்கும் வழி அல்லது பயிற்சி போன்றவற்றை இல்லாமையாக்கும் முறையில் பாதிப்பை ஏற்படுத்த கூடிய பாலின அடிப்படையில் அமையும் ஏதேனும் வேறுபடுத்துதல், தனிமைப்படுத்துதல் அல்லது தடைக்கற்கள் அனைத்தும் பாலின பாகுபாடு என்று அழைக்கப்படுகிறது.

**சரத்து** 1 பெண்களுக்கு எதிரான பாகுபாடு என்பது நீதியற்றதோடு அல்லாமல் மனிதகுல மாண்பிற்கு எதிரான குற்றமாகும்.

**சரத்து** 2 பெண்களைப் பாகுபடுத்துவதை வழிவகைக்கும் சட்டங்கள், சடங்குகள் மற்றும் நடைமுறைகள் அனைத்தையும் களைவதோடு தேவையான பாதுகாப்பளிக்கும் வழிவகை செய்கிறது.

**சரத்து** 3 பாலினப் பாகுபாட்டிற்கு எதிரான பொதுக் கருத்தை உருவாக்குவதை வலியுறுத்துகிறது.

**சரத்து** 4 கீழ்க்கண்ட உரிமைகளைப் பெண்களுக்கு உறுதிப்படுத்துகிறது.

1. அனைத்துத் தேர்தல்களிலும் ஓட்டுப் போடுவதற்கு.
2. அனைத்துத் தேர்தல்களிலும் போட்டியிடுவதற்கு.
3. பொதுத்துறை பதவிகளுக்கும் ஓட்டுப் போடுவதற்கு.
4. பொதுப்பதவிகளை வகிப்பதற்கும், மற்றும் பொதுப்பணிகளை நிறைவேற்றுவதற்கும் பெண்களுக்கு உரிமையளிக்கப்படுகிறது.

**சரத்து** 5 திருமணத்திற்குப் பிறகும், தனது குடியுரிமையைத் தொடர்ந்து கொண்டாடுவதற்கும் பெண்களுக்கு உரிமையளிக்கப்படுகிறது.

**சரத்து 6** திருமணத்தின் போது பெறப்பட்ட சொத்தை அடைவதற்கும், நிர்வகிப்பதற்கும், அனுபவிப்பதற்கும், விற்பதற்கும், வாரிசு அடிப்படையில் பெறுவதற்கும் உரிமை வழங்கப்படுகிறது.

- இடம் பெயர்வதற்கு.
- சுதந்திரமான முழுசம்மதத்தின் பேரில் திருமணம் செய்து கொள்வதற்கு, திருமணத்தை முறித்துக் கொள்வதற்கு
- குழந்தை நலம் பேணுவதில் வாழ்க்கைப் பங்குதாரரிடமிருந்து பணிகளில் பங்கீட்டுப் பெறுவதற்கு பெண்களுக்கு உரிமையளிக்கிறது.
- குழந்தைமணத்தையும், இளவயது திருமணத்தையும் அறவே ஒழிக்கிறது.

**சரத்துக்கள் 7 மற்றும் 8க்கும்** அனைத்து வகை தவறான செயல்களைப் பெண்கள் விபச்சாரம் செய்வதைப் போர் முனைத் தடுப்பு வழிமுறைகளைக் கொண்டுவரத் தேவையான தண்டனைச் சட்டங்களைத் திருத்தியமைப்பதற்கு வழிகாட்டுகின்றன.

**சரத்து 9**

- அனைத்து நிலை கல்வியை பெறுவதற்கும்.
- ஆண்களுக்கு கொடுக்கப்படுவது போன்றே ஒரே மாதிரியான பாடத்திட்டம், தேர்வு, தரம், கல்விக்கூடம், தரமான கல்விக்குரிய கருவிகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுப்பதற்கு.
- கல்விக்கான வாய்ப்புகள், செய்திகள் மற்றும் தொடர்கல்வி திட்டங்களைப் பெறுவதற்கு.
- கல்விக்கடன், கல்விக்கான ஊக்கத் தொகையைப் பெறுவதற்கான சம வாய்ப்புகளை பெறுவதற்கு பெண்களுக்கு உரிமையளிக்கிறது.

**சரத்து 10ன்படி** பெண்களுக்குக் கீழ்கண்டவற்றிற்கு உரிமை அளிக்கப்படுகிறது.

- தொழில் பயிற்சியைப் பெறுவதற்கு.
- தொழில் மற்றும் வேலைவாய்ப்புடைய கல்வியைச் சுதந்திரமாக தேர்ந்தெடுப்பதற்கு.
- வேலைக் கூடங்களில் சம ஊதியம் மற்றும் சமமாக நடத்தப்படுவதற்கும்.
- சம்பளத்தோடு கூடிய விடுப்பு, விடுமுறை, ஒய்வூதிய சலுகைகள் வேலையில்லாதபோதும் உடல்நலக் குறைவின் போதும் முதுமையடைந்த போதும், வேலைசெய்ய தகுதியற்ற நிலைமையின் போதும் பாதுகாப்புப் பெறுவதற்கு.
- குடும்ப நல நிதி பெறுவதற்கு.
- வேலை பார்ப்பதற்கு, திருமணத்தின் காரணமாக வேலையை இழக்கும் நிலையைத் தடுப்பதற்கு.
- வேலைக்குத் திரும்புவதற்கான உறுதியோடு மகப்பேறு விடுப்பு பெறுவதற்கு.
- வேலைக்கூடங்களில் குழந்தை நல சேவைகள் உள்ளிட்ட சமூகச் சேவை வசதிகளைப் பெறுவதற்குப் பெண்களுக்கு உரிமையளிக்கப்படுகிறது.

**சரத்து 11ன்படி**. அனைத்து அரசுகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் தனிநபர்களுக்கு அனைத்து உரிமைகளையும், அனைத்து இடங்களிலும் அமலாக்குவதை ஊக்குவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

மேற்கூறிய ஐக்கிய நாட்டின் சர்வதேச அளவிலான பெண்களுக்கான சட்ட உரிமைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வப்போது சட்டத்திருத்தங்கள் மூலமாகவும் இந்திய அரசியலமைப்பின் அனைத்துக் குடிமக்களுக்கும் குறிப்பாகப் பெண்களுக்கு அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

- சட்டப்பிரிவு 493 ன் படி ஓர் ஆண் ஒரு பெண்ணை ஏமாற்றிக் குடித்தனம் செய்வது குற்றமாகும்.
- 498 சட்ட பிரிவின்படி திருமணம் ஆன ஒரு பெண்ணைக் கடத்திச் செல்வது குற்றமாகும்.
- 370 சட்டப்பிரிவின்படி எந்தவொரு நபரையும் குறிப்பாகப் பெண்களை அடிமையாக வாங்குவதும் விற்பதும் குற்றமாகும்.
- 372 சட்டப்பிரிவின்படி விபச்சாரம் செய்யும் நோக்கத்திற்குச் சிறுமிகளை விற்பது குற்றமாகும்.
- 373 சட்டப்பிரிவின்படி விபச்சாரம் செய்யும் நோக்கத்திற்காகச் சிறுமிகளை வாங்குவது குற்றமாகும்.
- 374 சட்டப்பிரிவின்படி சட்டத்திற்குப் புறம்பான எந்தவொரு தொழிலுக்கும் கட்டாயப்படுத்துவது குற்றமாகும்.
- 292-294 சட்டப்பிரிவுகளின்படி பெண்களை ஆபாசமாக புத்தகங்களில் அச்சிடுட்டு விற்பனை செய்வது குற்றமாகும்.

இவற்றோடு இந்திய தண்டனைச் சட்ட விதிகளின்படி பெண்களை ஆபாசமாக காட்டுவதைத் தடுப்பதற்கென்றே ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது. 1986 ல் இயற்றப்பட்ட பெண்களை ஆபாசமாக சித்தரிப்பதைத் தடுக்கும் தடுப்புச்சட்டம் கீழ்கண்டவற்றைத் தடை செய்கிறது.

1. புத்தகங்கள் வடிவிலோ
2. துண்டுப் பிரச்சாரமாகவோ
3. புகைப்பட ச் சுருளாகவோ
4. திரைப்படங்கள் மூலமாகவோ
5. எழுத்துகள் மூலமாகவோ
6. புகைப்படங்கள் மூலமாகவோ
7. வடிவங்களாகவோ வரக்கூடிய விளம்பரங்களிலும் பதிப்புகளிலும், பெண்களை ஆபசமாக சித்தரிக்கக்கூடாது.

மேலும் காலங்காலமாக நமது சடங்குகளாகவும் சம்பிராதயங்களாகவும் உள்ள வரதட்சணை, குழந்தை மணம் போன்றவைகள் பெண்களின் நிலைமையை இழிவு படுத்துகின்றது.

- வரதட்சணை ஒழிப்புச் சட்டம்,1961 (1984ல் திருத்தப்பட்டது)
- வரதட்சணை ஒழிப்பு (மணமகள் மற்றும் மணமகனுக்கு வழங்கப்படும் பொருட்களை அட்டவணைப் படுத்தும்) விதிமுறை,1985
- குழந்தைமணம் தடுப்புச்சட்டம்,1929
- உடன்கட்டை ஏறுதல் தடுப்புச்சட்டம்,1989
- தேவதாசிமுறை ஒழிப்புச்சட்டம் 1988
- மனைவி குழந்தைகள் மற்றும் பெற்றோருக்கான ஜீவனாம்சம் வழங்கும் சட்டம்.
- இந்திய அத்தாட்சி சட்டம் 1982 (குறிப்பாகத் தற்கொலை, மணமகள் எரிப்பு மற்றும் கற்பழிப்பு)

மேற்கூறிய அனைத்துச் சட்டங்களும் இந்தியப்பெண்களைச் சடங்குகள் என்ற பெயரில் பலிகடா ஆவதைத் தடுத்து, காப்பாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. அவ்வப்போது, இச்சட்டங்கள் சூழ்நிலைக்கேற்றவாறு திருத்தியும் அமைக்கப்படுகின்றன.

தேசியப் பெண்கள் ஆணையம் பெண்களின் வாழ்க்கையில் நடக்கக்கூடிய குறிப்பிடத்தக்க பெண்களுக்கு ஊறுவிளைவிக்கத்தக்க பிரச்சனைகளைக் கண்டறிந்து அதற்கான சட்டவிதி முறைகளைப் பிரச்சனைகளைச் சமர்ப்பித்துள்ளது. அவையாவன,

- பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறைகள் தடுப்புச்சட்டம்.
- அனாதை மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள் தத்தெடுப்பு விதிமுறை1994.

• குற்றச் சட்டங்கள் திருத்தல் விதிமுறை (1994) குழந்தைகள் கற்பழிப்புத் தொடர்பான பெண்களுக்கு எதிரான காட்டுமிராண்டித் தனமான மற்றும் மிருகத்தனமான கொடூரங்கள் தடுப்பு விதிமுறை (1995)

## பெண்களைக் கேலி செய்வது ஒழிப்பு விதிமுறை

இவை அனைத்தும் பெண்களை இழிவுபடுத்தும் அனைத்துவித நடவடிக்கைகளையும் ஒழிப்பதற்காகத் தீர்மானிக்கப்பட்ட விதிமுறைகள் ஆகும். ஏற்கனவே இருக்கக்கூடிய சட்ட திட்டங்களை ஆராய்ந்து அவற்றை விமர்சிப்பதற்கும், தேவைப்படும்போழ்து தீர்வு வழிமுறைகளை ஆலோசனைகளாக வழங்குவதற்கும் தேசியப் பெண்கள் ஆணையத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் அரசியலமைப்புச் சட்டத்தை மீறும் நடவடிக்கைகளையும் கண்டறிந்து அதற்குரிய சட்ட உரிமைகளை அதற்குரிய அதிகாரிகளிடம் எடுத்துச் செல்லவும் தேசியப் பெண்கள் ஆணையத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டள்ளது.பெண்களுக்கான பெண்குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்காச் சிறப்பு உரிமைகள் மற்றும் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் மானுடவர்க்கத்தின் விலைமதிப்பில்லாச் செல்வங்கள். இச்செல்வங்கள் இன்று போற்றப்படுகின்ற போது தான், நாளைய சமூக வளர்ச்சி முழுமைபெறும். இன்றைய ஆரோக்கியமான, கல்வி பெறும் குழந்தைகள் நாளைய சுறுசுறுப்பான, அறிவாற்றல் மிக்க குடிமக்கள். ஒரு நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்வதற்கு நட்சத்திரங்களின் நிலைகளை ஆராயத்தேவையில்லை. குழந்தைகளின் முகங்களில் எளிதாகக் காணமுடியும்.

சட்டரீதியாக நமது அரசியலமைப்புச்சட்டப்பிரிவு24 ன்படி பதினான்கு வயதிற்குட்பட்ட அனைவரும் குழந்தைகளே. குழந்தைத்தொழிலாளர் (ஒழித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1986ன் படியும் பதினான்கு வயதிற்குட்பட்டவர்கள் குழந்தைகளாகவே

கருதப்படுவார். ஆனால் ஐக்கியநாடுகளின் குழந்தைகள் உரிமை சாசனம் பிரிவு1 பதினான்கு வயதிற்குட்பட்டவர்களைக் குழந்தைகள் என்று வகைப்படுத்தப்படுகிறது. குழந்தை என்பதும் ஒரு தனிமனிதன்தான் மனித உரிமைகள் என்பது இன்று எல்லோராலும் பேசப்படகூடிய முக்கிய அம்சமாக இருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தால் உறுதியளிக்கப்பட்ட அல்லது சர்வதேசஉடன்படிக்கைகளில் கூறப்பட்டுள்ள மற்றும் இந்திய நீதிமன்றங்களில் அமலாக்கப்படக்கூடிய தனிமனித வாழ்க்கைச் சுதந்திரம் சமத்துவம் மற்றும் மாண்பு ஆகியவையே உரிமைகள் என மனித உரிமைச் சட்டம் 1993ன் பிரிவு3(ஈ) வரையறுக்கிறது.

குழந்தைக்கு அதன் உடல் மற்றும் மனரீதியான முதிர்ச்சியின்மை காரணமாக தனிப்பட்ட பாதுகாப்பு அம்சங்கள், கவனிப்பு ஆகியன தேவையாக இருக்கிறது. இவற்றில் அதன் பிறப்பிற்கு முன்பும் பின்புமாய் அதற்குரிய தக்க சட்டப்பாதுகாப்பு அடங்கும்.

## ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை

குழந்தைப்பருவத்தில் உயிர்வாழ தடுப்பதும், விளையாட அனுமதிக்காமலும், பள்ளிக்கு அனுப்பாமலும், குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் எண்ணத்துடன் வேலைகளைச் செய்ய வைக்கின்ற நிலையில் பல நாடுகளில் முக்கியமாக வளர்ந்துவரும் நாடுகளிலும், வளர்ச்சி குன்றிய நாடுகளிலும் காண முடிகிறது. இந்த நிலையை போக்குவதற்காக குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை ஒன்றினை ஐ.நா. சபையில் 20.11.89 ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த உடன் படிக்கையில் இந்தியா நவம்பர் மாதம் 1992ல் கையெழுத்திட்டது.

இந்தக்கூட்டு ஒப்பந்தத்திற்குப் பொறுப்பேற்றுள்ள அனைத்து அரசுகளும் ஒப்பந்தத்தின் கருத்துகளை மதிப்பதோடு ஒவ்வொரு குழந்தைக்கும் எந்தவித பராபட்சமின்றி இந்த ஒப்பந்தத்தில் காணப்படும்

உரிமைகள் கிடைப்பதற்கான உத்திரவாதத்தையும் அளிக்க வேண்டும். அரசு அல்லது தனியார் சமூக நல அமைப்புகள் நீதிமன்றங்கள் நிர்வாக அதிகாரிகள், அமைச்சுத் துறைகள் முதலிய எந்தப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டாலும், குழந்தைகள் தொடர்பான எல்லா செயல் பாடுகளிலும், நடவடிக்கைகளிலும் குழந்தைகள் மிகச்சிறந்த நலன் பேணும் எண்ணமும், ஆர்வமும் தலையாய குறிக்கோளாக இருக்க வேண்டியது அவசியம்.

**உயிர் வாழ்வதற்கான உரிமை (விதி-6)**

ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படையிலேயே உள்ளார்ந்த உயிர் வாழும் உரிமை உண்டு. குழந்தையின் உயிர்வாழ்வு மற்றும் வளர்ச்சிற்கான உச்சநிலை சாத்தியக்கூறுகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

**ஆரோக்கியத்திற்கான உரிமை (விதி 24)**

ஒவ்வொரு குழந்தையும் நல்ல ஆரோக்கியமான உடல் நலத்தை அனுபவித்திட உரிமை உண்டு. நல்ல ஆரோக்கியமான உடல் நலம் என்பது சத்தான உணவையும், தூய்மையான குடிநீரையும் வழங்கிட அந்தந்த நாடுகள் உறுதி செய்திட வேண்டும்.

மேலும் நோய்த்தடுப்பு, தேகநலப்பராமரிப்பு, சத்தான உணவு ஆகியவற்றின் அவசியத்தைக் குறித்த அடிப்படையான அறிவை அனைத்துத் தரப்பினருக்கும் வழங்கிட வேண்டியது கடமை.

**குடியிருப்புக்கான உரிமை (விதி 27)**

ஒவ்வொரு குழந்தைக்கும் பாதுகாப்போடும், மாண்போடும் வாழ்வதற்கான போதுமான குடியிருப்புக்கான உரிமை உண்டு. குழந்தையின் உடல் ரீதியான, மனரீதியான, ஆன்மீகரீதியான, ஒழுக்கவியல் ரீதியான, மற்றும் சமூக ரீதியான வளர்ச்சிக்குத்தேவையான

வாழ்க்கைத்தரத்தை அடையும் உரிமை ஒவ்வொரு குழந்தைக்கும் இருக்கிறது.

தேவைகளின் அடிப்படையில்,குறிப்பாக ஊட்டச்சத்து, உடை மற்றும் உறைவிட வசதிகளைப் பொருத்தமட்டில், பொருள் மற்றும் பண்ட உதவி, துணைநடவடிக்கைகள் முதலிய உதவிகளை வழங்க வேண்டியது அவசியம்.மேலும் பொருளாதார ரீதியாய் குழந்தையைப் பாதுகாக்கும் பொறுப்பிலுள்ள பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்குத் தேவையான உதவியைத் செய்திட அனைத்து நடவடிக்கைகளும் உறுப்பு நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

## கல்விக்கான உரிமை (விதி 28,29)

ஒவ்வொரு குழந்தைக்கும் சம வாய்ப்பின் அடிப்படையில் ஆக்கப் பூர்வமான முன்னேற்றகரமான முறையில், தரமான கட்டாய இலவசக் கல்விக்கான உரிமையுண்டு. எந்தவொரு குழந்தைக்கும் பல்வேறு வகையான தொழிற்கல்வி உள்ளிட்ட உயர்நிலைக் கல்விக்கான வாய்ப்புகள் எளிதில் கிடைக்கக்கூடியதாய் இருக்கும்படி செய்தல் மற்றும் தேவைப்பட்டோருக்குக் கல்வி பயில்வதில் நிதியுதவி அளித்திடவும் வேண்டும். குழந்தையின் கல்வி என்பது குழந்தையின் தனிமனித ஆளுமைத் திறமைகள், உடல் மற்றும் மனரீதியான திறமைகள் அவற்றின் முழு வீச்சும் வெளிப்படும் அளவிற்கு வளர்ந்தெடுக்கப்பட வேண்டும். விஞ்ஞானத் தொழில் நுட்ப மற்றும் நவீன கற்பித்தல் முறைகளைப் பெற்றிட வாய்ப்புகள் உருவாக்கித் தரப்பட வேண்டும்.

## விளையாட்டுப் பொழுதுபோக்கு ஓய்விற்கான உரிமை (விதி 31)

அனைத்துக் குழந்தைகளுக்கும் ஓய்வெடுக்கவும், இளைப்பாறவும், அதன் வயதிற்குத்தகுந்த விளையாட்டுப் பொழுது போக்கு செயல்பாடுகளில் ஈடுபடவும் கலாச்சார, வாழ்க்கை மற்றும் கலைகளில் சுதந்திரமாகப் பங்கெடுக்கவும் உரிமை உண்டு.

கலாச்சாரக் கலையார்வப் பொழுதுபோக்கு மற்றும் ஓய்வுச் செயல்பாடுகளில் குழந்தைகளுக்குத் தகுந்த சம அளவான வாய்ப்புகள் கிடைப்பதற்குரிய வழிவகைகள் உருவாக்க வேண்டும்.

## பொருள்ாதாரச் சுரண்டல்களிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான உரிமை (விதி 32)

பொருளாதார ரீதியான சுரண்டல்கள், ஒடுக்குமுறைகளிலிருந்து பாதுகாக்கப்படவும் அபாயகரமான அல்லது குழந்தையின் தேக நலத்திற்குத் தீங்கு விளைவிப்பதற்கான அல்லது குழந்தையின்உடல்,மன, ஆன்மா, ஒழுக்க மற்றும் சமூக மேம்பாட்டிற்கு ஊறு விளைவிக்கக்கூடிய எந்தவொரு வேலையைச் செய்வதிலிருந்து பாதுகாக்கப்படவும் குழந்தைகளுக்கு உரிமை உண்டு.

## கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை (விதி 13,17)

எந்தவொரு குழந்தைக்கும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையுண்டு. குழந்தை விரும்பும் எந்தவொரு தொடர்புச் சாதனம் வழியாகவும், அனைத்துவகை விவரங்கள் மற்றும் தேவையான ஆக்கப் பொருட்கூறுகள் முதலானவை பரவலாகக் கிடைக்கும்படி செய்தி ஊடகங்கள் வழியாக அளிப்பதற்கான உத்திரவாதம் செய்யப்பட வேண்டும்.

சிறுபான்மையினத்தைச் சேர்ந்த அல்லது பழங்குடியினத்தைச் சேர்ந்த குழந்தைகளின் மொழி ரீதியான தேவைகளுக்கு செய்தி ஊடகங்கள் முக்கியத்துவம் தரும்படி ஊக்குவிக்கப்பட சேண்டும்.

## குழுவாதலுக்கான சுதந்திரத்திற்கான உரிமை(விதி 15)

அமைதியான ஒருங்கிணைப்பிற்கும், பிறரோடு தொடர்பு கொள்வதற்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் உரிமை உண்டு. சில குறிப்பிட்ட வரையறைகளைத் தவிர ( தேசியப் பாதுகாப்பு, பொதுச்

சொத்துப் பாதுகாப்பு, பொதுஇட ஒழுங்குமுறை, சமூக ஆரோக்கியம் போன்றவை) வேறெந்த வரையறைகளும் குழந்தைகளின் ஒருங்கிணைப் புற்கு எதிராக விதிக்கப்படக்கூடாது.

## உடல் மற்றும் மனரீதியான சித்திரவதைக்கு எதிரான உரிமை (விதி 19)

எந்த வொரு குழந்தையும், உடல்ரீதியான மற்றும் மன ரீதியான வன்முறை அழிவுபடுத்தப்படல், புறக்கணிப்பு அல்லது அலட்சியமாக நடத்தப்படல் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கப்பட உரிமை உண்டு.

இவ் விதமான அனைத்து வகை வன்முறைகளுக்கும் குழந்தைகள் ஆளாகமால் தடுக்க தேவையான சட்டரீதியான, நிர்வாக ரீதியான, சமூக ரீதியான, கல்வி ரீதியான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும் குழந்தைகள் மீதான வன்முறை மற்றும் அத்துமீறல்கள் குறித்த தொடர்க் கண்காணிப்பும், தேவையான இடங்களில் சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்க வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## பாலியல் வன்முறைக்கு எதிரான உரிமை ( விதி 34)

எல்லா வகையான பாலியல் ரீதியான சுரண்டல்கள், கொடுமைகளிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப்பட உரிமை உண்டு.

விபச்சாரம் மற்றும் பிறவேறு சட்டத்திற்குப் புறம்பான பாலியல் நடவடிக்கைகளில் குழந்தைகளைப் பயமுறுத்தியோ, பலவந்தப்படுத்தியோ, ஆசைகாட்டியோ ஈடுபடுத்துவதைத் தடுக்கும் அனைத்து வகையான நடவடிக்கைகளை அந்தந்த நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

## சட்டத்தை மீறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட குழந்தைகளுக்கான உரிமை (விதி 40)

சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்ட குழந்தைகள் நடத்தப்படும் விதம், பிறரின் அடிப்படை சுதந்திரங்களைப்பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையிலும் சமூகத்தோடு அவர்களைத் திரும்ப இணைப்பது குறித்தும், அக்குழந்தைகள் சமூகத்தில் ஆக்கப்பூர்வமான பங்கேற்பில் ஈடுபடுவதற்கான ஆர்வங்களின் அடிப்படையிலும் அமைய வேண்டும்.

குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படியாய் வாக்குமூலம் கொடுக்கும்படி குழந்தைகள் நிர்பந்திக்கப்படாமலும், அக்குழந்தைகளுக்கு எதிராயுள்ள சாட்சிகள் விசாரணை செய்யப்படவும் உரிமையுண்டு.

அவ்விதம் சட்டத்தை மீறியதாக கருதப்பட்டால், அத்தகு முடிவு அல்லது தீர்ப்பையும், மேற்படி நடவடிக்கைகளையும், சுயேச்சையான, சார்பற்ற அதிகாரி அல்லது சட்டப்படியான நீதியமைப்பால் மறு பரிசீலனைக்கு உட்படுத்துவதற்கான உத்திரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

மேலும், தேவைப்பட்ட சாத்தியமான இடங்களிலெல்லாம் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், குழந்தைகளைக் கையாளும் வழிவகைகள் பின்பற்றப்பட வேண்டியதும், அவ்விதமான நடத்துமுறைகளில் மனித உரிமைகள் மற்றும் சட்ட ரீதியான பாதுகாப்பு முழுமையாக மதிக்கப்பெறுதல் இன்றியமையாதது.

## இந்தியாவில் குழந்தைகளின் நிலை

இந்தியாவில் உள்ள 100 குழந்தைகளில்

- 16பேர் தூய்மையான குடிநீர் கிடைக்காமல் இருக்கிறார்கள்.
- 47 பேர் முதல் மூன்று வருட வாழ்க்கையில் சத்துணவு குறைவினால் ஏற்படும் நோய்களுக்கு ஆளாகிறார்கள்.

- 25 பேர் நோய் எதிர்ப்புத் தடுப்பூசி போடாமல் இருக்கிறார்கள்.
- 26 பேர் $2^1/_2$ கிலோ எடைக்குக் குறைவாகப் பிறக்கிறார்கள்
- 15 பேர் பள்ளிக்குச் செல்லவில்லை.

## குழந்தைத் தொழிலாளர்கள்

பதினான்கு வயதிற்குட்பட்ட ஒரு குழந்தை கூலிக்காக வேலை பார்த்தாலும், குடும்பத்தாருடன் சேர்ந்து பணி புரிவதாக இருந்தாலும் அதன் வளர்ச்சிக்கும் ஊறு விளைவிக்கக்கூடிய சூழலில் பணிபுரிவதும் சில நேரங்களில் குடும்பத்தினரைப்பிரிந்தும், பல சமயங்களில் நல்ல எதிர்காலத்திற்கான கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புகளை இழப்பதும் குழந்தைத் தொழிலாளர் நிலையாகுமென என உலகத் தொழிலாளர் அமைப்பு குறிப்பிடுகிறது.

85 விழுக்காடு குழந்தைகள் கிராமப்புறங்களில் விவசாயத்திலும்,கால்நடைவளர்ப்பிலும்,வீட்டில் கடைகளில் பிற வேலைகளிலும் ஈடுபடுகின்றனர். 15 விழுக்காடு நகர்ப்புறங்களில் தொழிற் சாலைகளிலும், கடை நிறுவனங்களிலும், வீட்டு வேலைகளிலும் ஈடுபடுகின்றனர்.

## குழந்தைத் தொழிலாளர் பிரச்சனைக்கான காரணங்கள்

- பரம்பரை குலத்தொழில்.
- வறுமை.
- பெற்றோர்களின் அறியாமை.
- கல்வியின் முக்கியத்துவம் உணரப்படாதது.
- குழந்தைகளின் எதிர்காலம் பற்றித் திட்டமிடாதது.
- சட்டம் சரிவர அமுல்படுத்தாதது.

## குழந்தைத் தொழிலாளர் முறையின் சமூக பாதிப்புகள்

குழந்தைகள் இளம்வளதிலேயே உடல் உழைப்பிற்குத் தள்ளப்படுவதால் அவர்களது சிந்தனை வளர்ச்சி தடைபடுத்தப்படுகிறது. தாழ்வு மனப்பான்மை, அறியாமை, உடல்நலபாதிப்புடன் இளம் தலைமுறையினர் வளர்வது நாட்டின் ஆதாரமான மனித வளத்தை வீணாக்குகிற செயலாகும். இக்குழந்தைகளுக்கு அந்தந்த காலகட்டங்களில் உரிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருந்தால் நாட்டின் வளர்ச்சிக்கு அவர்களது பங்களிப்பு இன்னும் சிறப்பாக இருக்கும்.

## குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு செயல்திட்டங்கள்

1. தொழிற்சாலைகள் சட்டம் 1948.
2. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் 1961.
3. தோட்டத் தொழிலாளர் சட்டம் 1951.
4. பீடி சுருட்டுத் தொழிலாளர் சட்டம் 1966.
5. கடைகள் நிறுவனங்கள் சட்டம் 1948.
6. குழந்தைத் தொழிலாளர் (ஒழிப்பு மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1986.
7. தேசியக் குழந்தைத் தொழிலாளர் கொள்கை 1987.
8. ஹெல்ப் லைன் 1098.

மத்திய மற்றும் மாநில அரசுகள் சார்பாக ஒவ்வோர் ஆண்டும் ஜீன்12ஆம் நாள் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளன்று குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் தொடர்பாக விழிப்புணர்வு கூட்டங்கள், ஊர்வலங்கள், கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் அன்று எல்லோரும் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் தொடர்பான செயல்பாடுகளில் கலந்து கொள்வோம் என உறுதிமொழி எடுக்கப்படுகிறது.

## குழந்தைகள் பாதுகாப்பு - தொழிலாளர்கள்

- மருத்துவத்துறை.
- காவல்துறை.
- நீதித்துறை.
- சட்டஉதவிமையம்.
- கல்வித்துறை.
- சுயஉதவிக் குழுக்கள்.
- தேர்வு செய்யப்பட்ட பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி உறுப்பினர்கள்.
- குழந்தைகள் நல நிறுவனங்கள்.
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்.

## குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பில் நகராட்சி மற்றும் ஊராட்சிகளின் பங்கு

குழந்தைகள் உரிமைகள் மீறல் மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறை போன்ற மனிதாபிமானமற்ற கொடுமைகளுக்கு எதிராக நகராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்களும், உறுப்பினர்களும் முக்கிய பணியாற்ற வேண்டும். மக்களோடு நேரடித்தொடர்பு கொண்ட இவ்வமைப்புகள் இப்பணியில் தீவிர அக்கறை செலுத்த வேண்டும்.

- நகராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் தன்னார்வத் தொண்டு நிறுவனத்துடனும், கல்வி நிலையங்களுடனும் இணைந்து அனைத்துக் குழந்தைகளின் உரிமைகள், குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும்.
- குழந்தை உரிமைகள், குழந்தைத் தொழிலாளர் முறை தீமைகள் குறித்து துண்டு பிரசுரங்கள் மற்றும் கையேடுகள் தயாரித்துப் பரவலாக விநியோகிக்க வேண்டும்.

- கடைகள், நிறுவனங்கள், உணவகங்களில் வேலை பார்க்கும் குழந்தைகளை அடையாளம் கண்டு அவர்களை உரிய பள்ளிகளில் (அல்லது) சமூகப் பாதுகாப்புத் துறையின் சார்பாக நடத்தப்படும் பள்ளிகளில் சேர்ப்பதற்கு உதவ வேண்டும்.
- குழந்தைத் தொழிலாளர் குடும்பங்களைச் சார்ந்த உறுப்பினர்களைச் சுய உதவிக்குழுக்களில் உறுப்பினராகச் சேர்த்து வருமானம் வரக்கூடிய தொழில்களைக் கற்றுக்கொடுக்கலாம்.
- குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர்களிடையே கூட்டங்கள் நடத்தி அவர்களது குழந்தைகளைத் தொழில்களிலிருந்து விடுவித்து, ஆரோக்கியமான சிறந்த குடிமக்களாக வளர்க்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தலாம்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்காக அரசாங்க கொள்கைகள் மற்றும் திட்டங்கள்

## பெண்கள் மேம்பாட்டிற்கான கொள்கைகள்

“மேம்பாட்டில் பெண்கள்” (WID) என்கிற சொல் 1970ம் ஆண்டிற்கு முன் நடைமுறைக்கு வந்நது.

பெண் எழுத்தாளர் ஈஸ்டர் போஸரப்ஸ் (Easter Boserups) என்ற பெண் எழுத்தாளர் எழுதிய புத்தகம் “பொருளாதார முன்னேற்றத்தில் பெண்களின் பங்கு” இவர்தான் முதலில் (Sexual Division Labour) பாலியல் பிரிவுகளில் ஊதியம் அல்லது தொழில் பற்றிப் புள்ளி விவரத்தோடு வெளியிட்டார். பிறகு (WID) “மேம்பாட்டில் பெண்கள்” என்கிற தொடரை வாசிங்டனில் உள்ள பெண்கள் கூட்டத்தில் பயன்படுத்தினர். சட்டம் மற்றும் நிர்வாக மாற்றங்கள் செய்தால் பெண்களை இன்னும் நன்றாகப் பொருளாதார அமைப்பிற்குள் கொண்டு வரமுடியும் என எடுத்துரைத்தனர். இந்த முன்னேற்றத்தில் மகளிர் என்கிற வார்த்தை நவீனப்படுத்துவதாகவே

இருந்தது. இது 1950 முதல் 1970 வரை உலகளாவிய முன்னேற்றத்தை ஒட்டி சிந்திக்கப்பட்டது.

தொழில் மயமாக்குவதால் மக்களின் வாழ்க்கைத்தரம் முன்னேறும் என்று கருதப்பட்டது. இதனால் அதிகபட்சமான கல்வி முறையினால், திறமை சார்ந்த மேலாளர்களும், தொழிலாளர்களும் உருவாக்கப் படுவார்கள்.

உழவர் சமுதாயம் தொழில் சார்ந்த நவீனமான மாற்றங்கள் காணும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது என்றார்கள். இதனால் சமுதாயத்தில் உள்ள அனைத்து அங்கத்திற்கும் தரமான கல்வி , ஊதியம், சுகாதாரம் மற்றும் பிற சேவைகள் அனைவருக்கும் போய்ச் சேரும் என கருதினார்கள். **(Trickle Down effect).**

**WID** அணுகுமுறை காலகட்டத்தில் மனித முதலீடு **(Human Capital)** அணுகுமுறைக்கு முக்கியத்துவம் அளித்தது. இதில் மக்களுக்குக் கல்வி மற்றும் கல்விச் சேவைகள் திறமையை வளர்ப்பதில் குறிக்கோளாக அமைந்தது.

1970ம் ஆண்டில் பேசப்பட்ட தொழில் மயமாக்குதல் மற்றும் நவீனப்படுத்துதல் ஆராய்ச்சியாளர்களைப் பெரிய சர்ச்சைக்கு உள்ளாக்கியது. அவர்களின் ஆராய்ச்சி முடிவில்பெண்கள் இக்கால கட்டத்தில் முன்னேறவில்லை என்றும் அடிமட்டத்தில் தான் உள்ளார்கள். சில துறைகளில் பெண்கள் மிகவும் குறைந்த அளவில் பாதித்தும் காணப்பட்டார்கள். அவர்கள் குறைந்த ஊதியத்திற்கும் ஒரே மாதிரியான வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். **(Monotonous)**

அதிக சதவீதமான பெண்கள் முறையான துறையை விட, முறைசாரா துறையில் தான் பணியாற்றினார்கள். மற்றும் அவர்கள் கல்வி, சுகாதாரம் இவற்றில் பாதிக்கப்பட்டனர். பெண்களுக்குச் சமுதாயத்திலும், குடும்பத்திலும் இரண்டாம்பட்சமான பங்குதான் தரப்பட்டது. தொழில் நுட்பம் அனைத்தும் ஆண்களுக்கு மட்டுமே என ஒதுக்கப்பட்டது.

பெண்களின் ஈடுபாடு தொழில் நுட்பத்தில் இல்லாமல் இருந்தது. மொத்தத்தில் பெண்கள் இந்தக் காலகட்டத்தில் பலனடையவில்லை என்று ஆராய்ச்சிக் கருத்துத் தெரிவிக்கிறது.

(1) **Assumptions** எடுகோள்கள் இந்த முன்னேற்றத்தில் பெண்கள் என்கிற கருத்து உலகளாவிய நிறுவனங்களால் நவீனப்படுத்துவது என்ற கோட்பாட்டினால் கொண்டு வரப்பட்டது. 1960-ல் பெண்களின் முன்னேற்றம் இல்லை என்பதால் 1970-ல் இந்த மாற்றத்தைக் கொண்டு வரப்பட்டது.

(2) முன்னேற்றத்தில் பெண்கள் அணுகுமுறை சமுதாயத்தில் இருந்த சூழ் நிலையைஅப்படியே ஏற்றுக்கொண்டனர். அவர்கள் பெண்கள் இந்தத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என ஆராயமல் அப்படியே எடுத்துக் கொண்டனர். இந்த முறையில் இனம், பால், கலாச்சார ரீதியில் பிரச்சனைகளை எடுத்துக் கொள்ளவில்லை. **(exploitation)** இந்த **WID**அணுகுமுறை நவீனப்படுத்துதலை ஒட்டி இருப்பதால் **Radical** கருத்துக்களைச் சார்புத் தன்மை உள்ள கோட்பாடு மற்றும் **(Dependency Theory) Marxist neo Marxist)** கருத்துக்களை எடுத்துக்கொள்ளவில்லை.

(3) முன்னேற்றத்தில் பெண்கள் WID என்கிற அணுகுமுறை பெண்களின் உற்பத்தித் தன்மையை மட்டும்தான் அதிகமாக எடுத்துக்கொண்டனர். பெண்களின் இனப்பெருக்க உற்பத்தித் தன்மைக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை.

பெண்களைப் பொருளாதார ரீதியாக மட்டும் திறமையை வளர்ப்பதாகத்தான் சித்தரித்தார்கள். திட்டமிடுபவர்கள் பெண்களைச் சந்தைப்படுத்துதல் எப்படி? என்று யோசித்தார்களே தவிர அவர்களின் அதிகபட்சமான வேலைச் சுமைகளைக் குடும்பம் மற்றும் தொழில், விவசாயம், சம்பந்தமான பிரச்சனைகளை ஆராயவில்லை. பெண்களுக்கு வருமானப்பெருக்குத் தகுதியைக் கொடுத்தால் போதுமென்று

நினைத்தார்கள். அவர்கள் சமுதாயத்தில் உள்ள பாலியல் உறவுகளை ஆராயவில்லை. அந்தக் காலகட்டத்தில் இருந்த ஆராய்ச்சியாளர்கள் பொறுத்தமட்டில் பெண்கள் பொருளாதார ரீதியாக சுதந்திரமடைந்து விட்டால் பாலியல் உறவுகளும் மாறிக்கொண்டே வரும் என்று நினைத்தார்கள். (Assumptions)

**சுருக்கமாக :**

1. முன்னேற்றத்தில் பெண்கள் என்ற கொள்கை 1960 - 1970ல் தோன்றப்பட்டது.
2. இது ஐ.நா. வின் முதல் 10 ஆண்டின் மேம்பாடு (Decade) நாட்டின் (GNP) யை அதிகரிப்பதன் மூலம் வறுமையைக் குறைக்கலாம் என்று கருதப்பட்டது.
3. உலகப் பொருளாதாரத்தைப் புதிதாக மாற்றியமைப்பதற்காக முதன் முறையாகப் புதிய உலகளாவிய பொருளாதார ஆணை உருவாக்கப்பட்டது.

**ஐ. நா. இரண்டாவது புத்தாண்டு கால மேம்பாட்டின் மாற்றங்கள்**

1. இந்தப் புத்தாண்டில் மனித இன மேம்பாட்டிற்கும் அடிப்படை மனிதத் தேவைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
2. முதன் முறையாக மொத்த மக்கள்தொகையில் பாதியாக மகளிர் மக்கள்தொகையை உலகலவிலான முன்னேற்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**சர்வதேச மகளிர் ஆண்டுகள் 1975 முதல் 1985 வரை.**

இதுவரை நான்கு சர்வதேச பெண்கள் மாநாடு நடைபெற்றுள்ளது.

1. சர்வதேச மகளிர் மாநாடு மெக்சிகோ நாட்டில் 1975 ஆம் ஆண்டு நடைபெற்றது.
2. இரண்டாவது உலகப் பெண்கள் மாநாடு கோபனேகன்-ல் 1980 ஆம் ஆண்டு நடைபெற்றது.

3. மூன்றாவது உலகப் பெண்கள் மாநாடு நைரோபியில் 1985 ஆம் ஆண்டு நடைபெற்றது.
4. நான்காவது சர்வதேச மகளிர் மாநாடு பீஜிங்கில் 1995 ஆம் ஆண்டு நடைபெற்றது.

## WID ன் தனிப்பட்ட அணுகுமுறை

1. இந்த அணுகுமுறையில் பெண்களை மேம்பாட்டின் முக்கியப் பாதையிலிருந்து தனித்து விட்டார்கள்.
2. இதன்படி பெண்களின் முன்னேற்றத்தை, ஒரு தனிப்பட்ட திட்டமாகத்தான் கருதினார்கள். ஆனால் பெண்களின் முன்னேற்றம் மேம்பாட்டின் முக்கிய பாதைக்குள் கொண்டு செல்ல வேண்டும்.

## மகளிரும் மேம்பாடும் (WAD) இது ஒரு மேம்பாட்டு அணுகுமுறை:

இது ஒரு நியோ-மார்க்சிஸ்ட் பெண்ணியம் அணுகுமுறை (neo-Marxist Feminist). இது 1970 ஆண்டின் பிற்பகுதியில் முக்கியத்துவம் பெற்றது. நவீன மயக் கோட்பாட்டைப்பற்றிய கேள்விகள் அதிகமாக பேசப்பட்டதால், 'மகளிரும் மேம்பாடும்' என்ற கருத்து முக்கியத்துவம் பெற்றது. இந்தக் கருத்துச் சார்ந்திருக்கும் கோட்பாட்டை ஒட்டியுள்ளது. இக்கோட்பாடு மார்க்சிஸ்ட் அணுகுமுறையைப் போலவே பெண்களின் தாழ்த்தப்பட்ட நிலையைப் பற்றிய கருத்தைச் சமுதாய மேம்பாட்டில் ஆரம்பநிலையிலிருந்தே பங்கேற்றுக் கொண்டு தான் இருந்தார்கள்.

இந்தக் கோட்பாடு பெண்களை வெறும் மேம்பாட்டுக்குள் கொண்டு வருவதைவிட, பெண்களையும் மேம்பாட்டின் நிலைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தது. பெண்கள் வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் தொடர்ந்து வேலை செய்து வருவதால்தான் சமுதாயம் ஒரு நிலையில் உள்ளது. ஆனால், அதே சமயம் சமுதாயத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகள் அதிகமாக்கப்பட்டுள்ளது.

ஒரு கோட்பாட்டின் ரீதியில் பார்க்கும்போது இந்த (WAD) அணுகுமுறை இனம் என்ற கருத்துக்கு முக்கியத்துவம் அளித்தது.

ஆனால் செயல் முறையில் பார்க்கும்போது இந்த அணுகுமுறை பெண்களை இனம், சாதி, மதம் போன்றவையோடு இணைந்து ஆராயவில்லை. இவை அனைத்தும் சமுதாயத்தில் பெண்களின் தனித்தன்மையைப் பாதிக்கக் கூடியவை.

இந்த அணுகுமுறையின் குறைபாடு சமுதாயத்திலுள்ள ஆணாதிக்கம் வித்தியாசமான உற்பத்தி திறன், பெண்களின் தாழ்ந்த நிலை, கொடுமைகள் இவை அனைத்தையும் ஒப்பிட்டு ஆராயவில்லை. பொருளாதாரம், சமூகம், அரசியல் போன்ற துறைகளில் பெண்களின் தாழ்ந்த நிலையை, அரசாங்கத்தின் நல்ல திட்டங்கள் மூலம் மாற்ற முடியும்.

மற்றொரு குறைபாடு, இந்த அணுகுமுறையும் மேம்பாட்டில் பெண்கள் அணுகுமுறை போலவே உற்பத்தித் துறைக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. மனித இனப்பெருக்கம் பெண்களின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான வேலையாக உள்ளது. ஆனால் WAD அணுகுமுறையில் இந்த இனப்பெருக்க உற்பத்தி முக்கியத்துவம் பெறவில்லை. இவர்களின் கருத்துப்படி பெண்களை மேம்பாட்டின் முக்கியமான பாதையில் கொண்டுவர, பெண்களுக்கு வருமானம் வரும் வழிகளில் பயிற்சி பெற வேண்டும்.

மேம்பாட்டு திட்டம் தீட்டுபவரின் கருத்துப்படி பெண்கள், வருமானம் வராத வேலைகளில் தான் அதிகமாக ஈடுபடுகிறார்கள். (உதாரணம்) குடும்பம் நடத்துவதில், வீட்டு வேலைகள் செய்து, குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதும், வீட்டில் பெரியவர்களைப் பார்த்துக்கொள்ளவும், மேம்பாட்டுத் திட்டத்தில் வருமானம் வரக்கூடிய வேலைகள் மட்டும் இடம் பெறுகின்றன. ஆனால் நமது பெண்கள் செய்யும் அதிக சதவீதமான வேலைகளில் வருமானம் வரக்கூடிய வேலைகள் மட்டும் இடம் பெறுகின்றன. ஆனால் நமது பெண்கள் செய்யும் அதிக

சதவீதமான வேலைகளில் வருமானம் வருவதில்லை. அந்த வேலைகளுக்கு அதிக மதிப்பும் இல்லை. இந்த குடும்ப வேலைப் பளுவினால் பெண்கள் சமூகமாக மேம்பாட்டுத் திட்டத்திற்குள் இணைய முடியவில்லை.

**சுருக்கமாக :**

1. இந்த அணுகுமுறை 1970-ம் ஆண்டில் பிற்பகுதியில் தொடக்கப்பட்டது.
2. இதன் அஸ்திவாரம் தாழ்ந்திருக்கும் கோட்பாடு மற்றும் நியோ மார்க்சிஸ்ட் பெண்ணியத்திலிருந்து எடுக்கப்பட்டது.
3. இதன் முக்கியமான நோக்கம் பெண்கள் ஆண்களைச் சார்ந்து இல்லாமல் சுதந்திரமாக இருக்கவேண்டும் என்பது தான்.
4. இது பொருளாதாரம், சமுதாயம், அரசியல் போன்ற பிரச்சினைகளைச் சமாளிப்பது.
5. இந்த அணுகுமுறையில் பெண்களுக்கு வருமானம் தரும் பொருளாதாரத் திட்டங்கள் மட்டுமே முக்கியத்துவம் பெறுகிறது.

**பாலியலும் மேம்பாடும் (Gad) இது ஒரு ஆற்றல் அதிகரிக்கும் அணுகுமுறை**

இந்த அணுகுமுறை 1990-ஆம் ஆண்டு முக்கியத்துவம் பெற்றது. மற்ற அணுகுமுறைகளின் குறைபாடு இதில் இல்லை. இதில் பெண்களின் உற்பத்தி மற்றும் மனித இனப்பெருக்க உற்பத்தியின் தொடர்புகளை நன்றாக ஆராய்ந்து உள்ளார்கள் மற்றும் சமுதாயத்தில் பெண்களின் தாழ்ந்த நிலைப் பாதிப்புகள், சமுதாயம், பாலியல் தொடர்புகள், ஆண், பெண் வேலைகளின் பங்கு போன்றவை இந்த அணுகுமுறையில் முக்கியத்துவம் பெற்றுள்ளது

கேட்டிங் என்ற ஆராய்ச்சியாளர் இந்த அணுகுமுறையின் முக்கியமான கூறுபாடுகள் பற்றி ஆராய்ந்துள்ளார். அவரின் கருத்துப்படி

பாலியலும் மேம்பாடும் என்ற அணுகுமுறை ஒரு முழுமையான கண்ணோட்டத்திலிருந்து வரையப்பட்டது. இதில் சமுதாயம், பொருளாதாரம், அரசியல் போன்றவையின் முழுமையான கருத்தை எடுத்துரைத்தன. இந்த முறையின்படி பெண்களை எவரும் பெண்களாகப் பார்க்கவில்லை. ஆனால் அவர்களைச் சமுதாயத்தால் உருவாக்கப்பட்ட பாலியல் மற்றும் பொறுப்புகள், வேலைகளில் பங்கு போன்றவைகளோடு ஆண்களையும், பெண்களையும் இணைத்து ஆராயப்பட்டது மற்றும் இந்த முறை வெறும் பெண்களை மட்டும் எடுத்துக்கொள்ளாமல் சமுதாயத்தில் சமநிலை பெறுவதற்கு ஆண்களின் பங்கை வரவேற்கின்றனர். இந்த அணுகுமுறையில் பெண்களின் மேம்பாட்டிற்குத் தேவையான சமுதாயத் தேவைகளைத் தன் கடமையாகக் கருதவேண்டும். இந்தக் கருத்துச் சர்ச்சைக்கு உள்ளாகி உள்ளது. ஏனென்றால் நடைமுறையில் 1980-க்குப் பின் அரசு பெண்களுக்காக வழங்கி வந்த சமுதாயச் சேவைகளைப் (குழந்தைகள் காப்பகம், சுகாதாரப் பாதுகாப்பு போன்றவை) பொருளாதாரப் பாதிப்புக் காரணமாக அதிகமாக குறைந்துவிட்டது.

இந்த அணுகுமுறையில் பெண்களை, அமைதியான, அரசு சலுகைகளைப் பெறுபவர்களாக மட்டும் இல்லாமல் பெண்களைச் சமுதாய மாற்றத்திற்கான அங்கங்களாகக் காண விரும்புகிறது.

இது இனம் மற்றும் இனவேறுபாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இதன்படி சமுதாயத்தில் உள்ள ஆண் ஆதிக்கம் பெண்களை அடக்கி ஆள்கின்றன. ஆராய்ச்சியாளரின் கருத்துப்படி பெண்கள் மேம்பாட்டிற்குள் வரவேண்டுமென்றால் பெண்களுக்கான சட்டம் மற்றும் உரிமைகள். நிலம் சம்பந்தப்பட்ட விழிப்புணர்ச்சி பெண்களுக்கு இருக்க வேண்டும். இந்த அணுகுமுறை போன்றவையின் குறைபாடுகளை எடுத்துக்காட்டின. இந்த அணுகுமுறை WID, WAD உலகமய மேம்பாட்டுத் துறையில் அதிகம் காணப்படுவதில்லை.

## சுருக்கமாக

1. WID, WAD அணுகுமுறையில் பெண்களைத் தனிப்பட்ட ஒரு அங்கமாகத்தான் பார்க்கப்பட்டது. ஆனால் GAD அணுகு முறையின்படி பெண்களை மேம்பாட்டின் முக்கியப் பாதையில் கொண்டு செல்கின்றது.

2. இந்த முறைப்படி பாலியல் தொடர்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

3. பாலியல் உறவுகள், சமுதாயம், பொருளாதாரம், கலாச்சாரம் போன்றவை ஆண், பெண் இடையே பார்க்கின்றனர்.

4. இந்த அணுகுமுறையில் பெண்களின் உற்பத்தி மற்றும் மனித இனப்பெருக்க உற்பத்தி பாலியலுடன் இணைக்கப்படுகிறது. பெண்களின் தாழ்ந்த நிலைக்குக் காரணம் ஆணாதிக்கம். ஆண் பெண்ணுக்கு இடையே உள்ள உடல் ரீதியான வேறுபாடுகளினால் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதில்லை.

# 2. மகளிருக்கான ஆற்றல் மிகுமை : தற்போதைய அணுகுமுறைகள் மற்றும் உத்திகள்

இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் தனது முன்னுரையிலேயே இன வேறுபாடற்ற கொள்கைகளைத் தொகுத்துள்ளது. பெண்களுக்கான உரிமைகளை அளித்து, அதற்கும் மேலாகப் பெண்களுக்கானப் பகுத்தறியும் திறனையும் அளித்துள்ளது.

பாலின வேறுபாடு பல விதங்களில் வெளிப்பட்டது. குறிப்பாகக் கடந்த 10 ஆண்டுகளில் மக்கள் தொகையில் பெண்களின் குறைந்த விகிதம், சமூக மற்றும் அடிமட்ட நிலையில் ஏற்படும் வன்முறைகள், பெண் குழந்தைகள், விடலையர், பெண்களுக்கு எதிரான யுகங்கள் நாட்டில் இருந்தது.

சமூகத்தின் அடிமட்டப் பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குறிப்பாகக் கிராமப்புறப் பெண்கள், முறைசாரா நிறுவனங்களில் உள்ளவர்களுக்குக் கல்வி, உடல் நலம், வளங்கள் குறைவாகவே உள்ளன. அதனால் அவர்கள் அதிக அளவு ஏழ்மையாகவும், சமூகத்தில் பிரிக்கப்பட்டும் உள்ளனர்.

பெண்கள் குடும்பத்தில் சந்தித்து வரும் பலவிதமான பின்னடைவுகளைக் கடந்து முன்னேற பெண்களின் ஆளுமை வளர்க்கப்பட வேண்டும். பெண்களின் ஆளுமையை வளர்ப்பது என்பது. அவர்களிடம் தங்களைப் பற்றிய உணர்வும், சுயமரியாதை, தன்னம்பிக்கை, திறமைகளைப் பற்றிய நல்லெண்ணம் ஆகியவற்றை உருவாக்கி, உற்பத்தித் திறனைப் பெருக்கி, உணர்வுப் பூர்வமாகவும், பொருளாதார ரீதியாகவும் சுயமாக வாழும் திறன் படைத்தவர்களாய் மாற்றி எவ்வித நெருக்கடியிலும் தங்கள் தன்னியல்புகளையும் கொள்கைகளையும் இழந்து விடாத உறுதித்தன்மை உடையவர்களாக உருவாக்குவதாகும்.

## தலைமைப்பண்புகள்

சிந்தனை, அதிகாரம், சமூக உறவுகள் ஆகிய பல்வேறு நிலைகளில் ஆண், பெண் இருவருக்குமிடையே ஏற்றத்தாழ்வுகளைக் கற்பித்து மனித சமூகத்தில் வேற்றுமைகளை உருவாக்குகிற ஒரு தலையாய பிரிவினைச் சக்தி ஆணாதிக்கக் கோட்பாடாகும்.

மனித வரலாற்றில், எத்தனையோ சமுதாய அமைப்புகளும் பல்வேறு வாழ்க்கை முறைகளும் மாறிப்போயுள்ளன. ஆனால் கடந்த 3000 ஆண்டுகளாக இக்கோட்பாடு மாறுதலுக்கு உட்பட மறுக்கிறது. எனவே நாணயம், தியாகம், உழைப்பு, இரக்கம், அழகு போன்றவையே பெண்களைப் பற்றிய நமது எண்ணமாக, சிந்தனையாக உள்ளது. இயற்கையாகவே பெண்கள் குறைபட்ட பிறவியாக இதுநாள் வரை நோக்கப்படுகின்றனர். கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில் கூட அதனால்தான் அறிவில்லாத ஆண்தான் பெண் (ஆண்-அறிவு = பெண்) என்கிறார். மேலும், இந்து தர்மத்தை எழுதிய மனுவும் பெண்கள் அனைத்து நிலைகளிலும் ஆண்களைச் சார்ந்தே வாழ வேண்டியவர்கள் என்று கூறுகிறார்.

இவ்வாறு தாழ்வாகப் பேசியும், எழுதியும், பழகியும் வந்ததால் தான் இன்று பெண்கள் இவ்வளவு தாழ்ந்து போயிருக்கிறார்கள். பெண்கள் என்பவர்கள் ஆட்சி புரிவதற்கில்லை, அடுப்பறையைப் பார்த்துக் கொள்ள என்ற எண்ணம் ஆண்களுக்கு மட்டுமின்றிப் பெண்களுக்கும் ஏற்பட்டுள்ளது. இதற்குப் பல்வேறு (1) உள்தடைகள் மற்றும் (2) வெளித்தடைகள் முக்கிய காரணங்களாக அமைகின்றன.

### உள்தடைகள் :

பெண்கள் தலைமையேற்றலில் தங்களுக்குள் பின்வரும் பல்வேறு உள் தடைகளை வளர்த்துக்கொண்டுள்ளனர்.

1. நாணம் / தன்னடக்கத் தடை. (Modesty)
2. பாதுகாப்பாக இருக்க விரும்புதல். (Play Safe)
3. முழு நிறைவாக நடக்க நினைத்தல். (Perfection)
4. இடரில்லாமல் இருக்க விரும்புதல். (Security)
5. போட்டியில் பங்குகொள்ள அச்சம். (Completition)
6. சார்புத்தன்மை. (Dependency)
7. வேலைப் பாகுபாட்டுத்தடை. (Role Discrimination)
8. இரு மனப் போக்கு. (Ambivoilence)
9. தன்னைத் தானே தாழ்த்திக் கொள்ளுதல். (Put yourself down)
10. திறன் தடை. (Efficiency)

## வெளித்தடைகள்

*குடும்ப வாழ்க்கையில்*

- பெண்கள் வேலை ஆண்கள் வேலை என இனக்கூறுகளாகப் பிரிந்திருத்தல்.
- பெண்களின் பொருளாதாரச் சார்புத்தன்மை.
- ஆண் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளித்தல்.
- ஆண்களின் குடும்ப ஆதிக்கம் மற்றும் வன்முறை.

## கல்வி

- பெண்களின் மிகக்குறைவான வாய்ப்புகள் மற்றும் வாய்ப்புரிமைகள். (Choices)
- பெண் குழந்தைகளின் அதிக அளவிலான இடைநிற்றல்.
- இளம் வயதிலேயே வீட்டுப் பொறுப்புகள் மற்றும் குழந்தைப் பராமரிப்பினை மேற்கொள்ளுதல்.

## உடல் நலம்

- பெண்களின் உடல் நலத்திற்கு முக்கியத்துவம் தருவதில்லை.

## வேலைவாய்ப்புகள்

- பெண்களுககான வாய்ப்புகள் மிகக்குறைவு.
- பெண்களுக்கான பயிற்சிகள் மிகக்குறைவு.

## வருமானம்

- குறைந்த மதிப்பிலான வேலைகள் மற்றும் குறைந்த ஊதியம்.
- வேலை தடைப்படுவதால் வருமான இழப்பு.
- முறை சாராத பணியில் இருப்பதால் பெண்கள் அதிகமான ஊதியம் வாங்கவியலாது.
- ஊதியமில்லாத வேலையால் ஏற்படுகின்ற துன்பங்கள்.

## ஏழ்மை

- சமூகம் பெண்களுக்குகென ஏற்படுத்தியுள்ளது.

## ஆணாதிக்கம்

- பணியிடங்களில்
- அரசியலில்
- நீதித்துறைகளில்
- மத நிறுவனங்களில்

## ஆண் சார்ந்த முடிவாற்றல் ( Male oriented decision - making)

தனி மற்றும் பொது வாழ்க்கையில் முடிவு செய்யும் ஆற்றல் ஆண்களின் நோக்கிலேயே அமைந்துள்ளது.

மேற்கூறிய தடைகளை ஏற்படுத்துகிற பண்புகளுடன் சமூக மயப்படுத்தப்படுவதாலும், உள்வாங்கப்படுவதாலும் தவறான எண்ணப் படிவங்கள் மிக ஆழமாக வேரூன்றிப் பரவியுள்ளன. எனவேதான் பஞ்சாத்துத் தலைவர்களாகப் பெண்கள் பலர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் பல சிக்கல்களைச் சந்திக்க நேரிடுகிறது. தனது கணவனையோ பெற்றோரையோ சார்ந்து செயல்படுகிற சூழல் ஏற்படுகிறது.

உரிமைகள் எப்போதும் இலவசமாகக் கொடுக்கப்படும். ஆனால், அவற்றைப் பெற நாம் தான் போராட வேண்டும். உறுதியோடு இருக்க வேண்டும். சில சமயங்களில் பொது விவாதங்கள், போராட்டங்கள் மூலமாகவே அவற்றைப் பெற வேண்டியுள்ளது.

இதற்குப் பெண்கள் தங்களைப் பற்றியும் தன்னுள் உள்ள சக்தியையும் புரிந்து கொள்ளச் செய்வதே முன்னேற்றத்தின் முதல் படி ஆகும். இதற்குப் பெண்கள் தலைமைப் பண்புகள் கொண்டவர்களாக உருவாகுதல் மிக அவசியமாகும். "தலைவர் பிறப்பதில்லை. உருவாகின்றனர்" என்ற கருத்திற்கேற்ப தலைமைப் பண்பு உடையவர்களாக மாற பின் வரும் வழிகளில் ஆற்றுப்படுத்தலாம்.

சமூக செயல்பாடுகளில் பெண்கள் : பொருளாதாரம், சமூகம், அரசியல் பொதுநிருவாகம், திட்டமிடுதல், நிதி, உள்கட்டமைப்புகள், வறுமை ஒழிப்பு, நலம், நீர் விநியோகம் மற்றும் சுகாதாரம்.

## பெண்களின் ஆளுமைப் பண்பு - ஐந்து அம்ச நடைமுறை பரிந்துரைகள் :

பெண்களிடம் ஆளுமைப்பண்புகளை நாம் வளர்க்க முற்படும் பொழுது திறன் சார்ந்த அணுகுமுறையை கையாள்வது நல்லது.

## நல் வாழ்வு

உடல்ரீதியாக சத்தான உணவு, ஆரோக்கியமான இருப்பிடம், வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மற்றும் நோய்களிலிருந்து உடல்நலக் குறைவிலிருந்து பாதுகாக்க மருத்துவக் கவனிப்பு அளிக்கப்பட வேண்டும். உணர்வுப் பூர்வமாக அன்பான உறவுகள், அக்கறையுடன் கூடிய கவனிப்பு மற்றும் பாதுகாப்புணர்வு அளிக்கப்பட வேண்டும்.

இதன் விளைவாகப் பெண்கள், நோயற்ற நீண்ட ஆயுளுடன் வாழ்வதோடு குழந்தைப் பருவத்திலிருந்தே தங்கள் வாழ்க்கையைப் பிடிப்போடு, அர்த்தத்தோடு அமைத்துச் சுற்றி வாழ்பவர்களோடு ஒன்றுதலோடும், ஒருங்கிணைந்தும் வாழும் ஆற்றல் பெறுகிறார்கள்.

## ஆற்றல் வளர்

கல்வி, கலை மற்றும் விளையாட்டுப் போன்ற அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போல பெண்களும் அறிவையும் திறன்களையும் வளர்த்துக் கொள்ள சமவாய்ப்பும், அதிக ஊக்கமும் அளிக்கப்பட வேண்டும்.

இதனால் பெண்கள் அன்றாட வாழ்வினை, பிரச்சினையின்றி மேற்கொள்ளும் அடிப்படை அறிவு பெறுவதோடு தங்கள் சொந்தக் காலில் நிற்கத் தேவையான, பணிகளில் சிறக்க உதவும் தொழிலறிவும், சமூகத்திலும், தேசத்திலும் முன்னின்று செயலாற்றக் கூடிய சிறப்புத் திறன்களையும் வளர்த்துக் கொண்டு, தன்னிறைவு பெற்று, பிறருக்கும் பயன்தரும் வாழ்க்கைக்குத் தயாராகிறார்கள்.

## விழிப்புணர்வு

வெறும் ஏட்டுக்கல்வியோடு நின்று விடாமல், பெண்களிடம் தங்கள் உரிமைகள், கடமைகள் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கி,

அவர்களுடைய தாழ்வு மனப்பான்மையையும், தன்னம்பிக்கையின்மையையும் களைய உதவ வேண்டும். மேலும், பகுத்தறிவோடு தனிமனித, சமூக நன்மை தீமைகளை உணர்ந்த முடிவுகள் எடுக்கவும், செயலாற்றவும் ஊக்குவிக்க வேண்டும்.

பல பெண்கள் கற்றுத் தேர்ந்திருந்தும், பிற ஆற்றல்களை வளர்த்திருந்தும் சுயமாய் வாழ்வதற்கு வேண்டிய மனத்திடமும், உத்வேகமும் இன்றி எதற்கும் பிறரையே எதிர்பார்த்திருப்பவர்களாகக் காணப்படுகிறார்கள். அவர்கள் விழிப்புணர்வு அடைந்து, தனிமனித மேம்பாட்டை அடைவதுடன், சமூகத்திலும் ஆக்கப்பூர்வமாகச் செயல்பட ஆரம்பிப்பார்கள். மொத்தத்தில் சுயமாகத் தங்களுக்கென்று ஒரு தனித்துவத்தை ஏற்படுத்திக் கொண்டு குடும்பத்திலும் சமுதாயத்திலும் ஆற்ற வேண்டிய பங்கினை உணர்ந்து, கடமை உணர்ச்சியுடன் நடந்து கொள்வார்கள்.

## பங்கேற்பு

அறிவில் சிறந்து, விழிப்புணர்வு பெற்ற பெண்களை, ஆண்கள் மற்றும் சுற்றத்தார் அனைவரும் அவர்கள் மதிப்பு உணர்ந்து நடத்த வேண்டும். வீட்டில் மட்டுமின்றி பணி செய்யும் இடங்களிலும், சமூக நடவடிக்கைகளிலும் பொறுப்புகளை ஏற்க, தீர்மானிக்க பெண்களுக்குச் சமவாய்ப்பு அளிக்கப்பட்ட வேண்டும்.

பொதுவாக குடும்ப ஆண்களும், பெரியவர்களும் வளரும் பெண்களோடு பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளாமல் இருப்பது தங்கள் ஆளுமையை உறுதிபடுத்துவதாக எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால், மாறாக அவர்களது சுமைகள் கூடி, அவர்தம் நலமும், முன்னேற்றமும் தான் பாதிக்கபடுகின்றன. அதே சமயம் வேகமான வாழ்க்கைச் சூழலில், பெண்களின் ஆற்றலை வளர்த்து, அவர்களுக்குச் சம உரிமையும், பொறுப்புகளும் அளிக்கப்பட்டால், ஆற்றலில் வளர்வார்கள். குடும்பத்திற்கு, முக்கியமாக வருங்கால சந்ததியருக்கு வாய்ப்புகள் பெருகி நலமும், முன்னேற்றமும் உண்டாகும்.

## ஆளுமை :

சிறு வயதிலிருந்தே பெண்குழந்தைளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். வீட்டிலும், கல்வி நிலையங்களிலும் அவர்களின் தன்னம்பிக்கை மெருகூட்டப்பட்டுத், தலைமைப் பண்புகள் வளர்க்கப்பட வேண்டும். அவர்களுக்குரிய வயதை அடையும் பொழுது வீட்டுத் தலைமையில் பங்களிக்கப்பட்டு, அதிகாரமும் பகிர்ந்தளிக்கபட வேண்டும். பெண்களுக்குச் பொருளாதாரச் சுதந்திரம் அளிக்கப்பவதோடு, சொத்துரிமையில் சட்டப்பூர்வமாக மட்டுமின்றி செயல்ரீதியாகவும் சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும். வீட்டில் மட்டுமன்றி வெளியிலும் பெண்கள் ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடவும், தலைமையேற்கவும் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். வாக்களிப்பது, வரி செலுத்துவது போன்ற சமூகக் கடமைகளை ஆற்றுவதை மற்ற குடும்ப உறுப்பினர்கள் எந்த விதத்திலும் தடைசெய்யக் கூடாது.

இப்படிக் குடும்பங்களில் பெண்களோடு அதிகாரப்பகிர்வு ஏற்படும் பொழுது குடும்ப நலன் மேம்படுவதோடு பொருளாதார மேம்பாடும் ஏற்படும். சமூகப் பொறுப்புகளில் பெண்கள் களமிறங்கும்போது, சமூக நலன் மேம்படுவதோடு சமூகப் பாதுகாப்பும் அதிகரிக்கின்றது. மேலும் பெண் உரிமைகளைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டு அவர்களுக்கெதிரான அடக்குமுறைகளும் வன்முறைகளும் குறைந்துவிடும்.

## பெண்களுக்குப் பன்முக ஆதரவு

- எந்த ஒரு சராசரி பெண்ணுக்கும் அவளது வாழ்வின் வெவ்வேறு கட்டங்களில் பல்வேறு விதமான பிரதிபலிப்புகள் உண்டு.
- இப்படிப் பன்முக வெளிப்பாடுள்ள பெண்களின் நிலை முன்னேற வேண்டுமானால் அதற்கு அதைப்போன்றே பன்முக ஆதரவு தேவை.

## குடும்பம்

- பெண்களின் முன்னேற்றத்தில் முதல் முக்கிய பொறுப்பு அவர்களது குடும்பத்தைச் சாரும். இதில் அவர்களை உருவாக்கி உருவேற்றும் குடும்பங்களும் அவர்கள் வரவேற்கப்பட்டு வாழும் குடும்பங்களும் இரண்டிற்கும் சமமான பங்கு உண்டு.
- இந்த வகையில் குடும்பங்களில் பெண்களின் அருமையை உணரச் செய்து, அவர்கள் பிறருக்காகவே வாழ வேண்டியவர்களல்ல என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் இருந்து முயற்சிகள் தொடங்க வேண்டும்.
- குடும்பத்தில் பெண் குழந்தைகளுக்கு அன்பான அரவணைப்பு, அக்கறையுடன் கூடிய கவனிப்பு மற்றும் வேண்டிய கல்வி வசதிகள் அளிக்கப்பட வேண்டும்.
- அவர்களது உள்ளுணர்வுகளுக்கு மதிப்புத் தந்து ஊனப்படுத்தும் வகையில் பேசவோ நடத்தவோ கூடாது.
- பெண்களுக்கு இல்லங்களில் கடுமையான வேலைச் சுமைகளோ தண்டனைகளோ அளிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- கல்வியிலும் வேலைபார்க்கவும் பெண் குழந்தைகளுக்குச் சம வாய்ப்பும் சுதந்திரமும் அளிக்கப்பட வேண்டும்.
- திருமணம், வரதட்சிணை போன்றவை சமூகக் கட்டாயங்களாக்கப்படாமல் பெண்களின் உரிமைநிலை நாட்டப்பட வேண்டும்.
- வேலைக்குச் செல்லும் பெண்களிடம் நம்பிக்கையோடு நடந்து கொள்வதுடன் வீட்டு வேலை, குழந்தைப் பராமரிப்பு போன்ற செயல்பாடுகளில் உதவியாக இருக்க வேண்டும்.
- குடும்பத்தலைவர்களின் (ஆண்களின்) நிழலுருவமாய்க் கருதாமல் அவர்களுக்குக் கருத்துச் சுதந்திரம் அளிப்பதோடு, குடும்ப நிருவாகத்திலும் பங்களிக்க வேண்டும்.

- மேலும் ஒவ்வொரு குடும்பத்திலும் பெண் உறுப்பினர்களுக்கு எதிரான அடக்குமுறைகளைக் குடும்ப கவுரவம் கருதி மூடி மறைக்காமல் முறையான நிவாரணம் அளிக்கப்பட வேண்டும்.

**கல்வி :**

- பள்ளி முன்பருவத்திலிருந்தே பெண்குழந்தைகளைச் சரியான முறையில் பராமரிக்கவும் அவர்கள் ஆற்றல்களை வளர்க்கவும் ஈடுபாடு கொள்ள வேண்டும்.
- இந்த வகையில் ICDS, போன்ற சமுதாய சேவைகளைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
- ஆரம்ப வகுப்புகள் முதற்கொண்டு பெண் குழந்தைகள் உட்பட அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச, கட்டாயக் கல்வி என்பது ஏட்டளவில் இருந்தாலும், அதைக் குறைவில்லாமல் நிறைவேற்ற ஆக்கப்பூர்வமான முயற்சிகளுக்குத் திட்டமிடல் வேண்டும்.
- நம் சமூகங்களில், குறிப்பாக அடிமட்டங்களில் பெண் கல்விக்குப் பெரும் தடையாய் இருப்பது பெண் குழந்தைத் தொழில். இந்தக் கொடிய சமூக அநீதிக்கு எதிராய் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மாற்றுக் கல்வி ஏற்பாடுகளும் செய்து தரப்பட வேண்டும்.
- பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் வயது வரம்பில் கல்விக் கட்டணங்களில் சலுகைகள் மற்றும் உதவித்தொகை, விடுதி வசதிகள், போக்குவரத்துவசதிகள் போன்ற உதவிகள் அளிக்கப்படலாம்.
- கல்வி அமைப்புகள் மாணவிகளிடையே கற்றலையும், ஆற்றலையும் வளர்க்கும். அதே சமயத்தில் அவர்களின் தன்னம்பிக்கையின்மை, தாழ்வு மனப்பான்மை ஆகியவற்றை அகற்றுவதில் கவனஞ் செலுத்த வேண்டும். எழுத்தறிவுக்கு

அப்பாற்பட்டு விளையாட்டுக் கலைத்திறன்களை வளர்க்க வாய்ப்பளிப்பதோடு மாணவிகளின் ஆளுமை மற்றும் தலைமைப் பண்புகளை மேம்படுத்த NSS, NCC செஞ்சிலுவை மற்றும் பிற குழு நடவடிக்கைகளும் பாடத் திட்டத்தோடு ஒருங்கிணைக்கப்பட வேண்டும். சமூகப் பாதுகாப்பின்மையைக் காரணமாகக் கருதி இத்தகைய வாய்ப்புகள் பெண் மாணவிகளுக்கு மறுக்கப்படக் கூடாது.

- பெரும்பான்மையான நமது மக்கள் வறுமை மற்றும் அடிப்படை வசதிகளற்ற கிராமம் சார்ந்த சூழல்களில் வாழ்ந்து வருவதால் பெரும்பான்மையான பெண்கள் முறையாகக் கல்வி அமைப்புகளை வந்தடைவது கடினம். ஆகையால் கல்வி சேவைகள், முறைசாராக் கல்வி, முதியோர்கல்வி, திறந்த வெளிப் பள்ளிகள், பல்கலைக் கழகங்கள் போன்ற மாற்று முறைகளில் அவர்களிடம் எடுத்துச் செல்லப்படவேண்டும்.

## வேலைவாய்ப்பு

பெண்மையைக் காரணம் காட்டி வேலை வாய்ப்பிற்கு தடை சொல்லும் பழங்காலத்து நம்பிக்கைகள் அகற்றப்பட வேண்டும். பெண்களுக்கு அறிவுப்பூர்வமான உள்மனை வேலைகள் மட்டுமே பொருத்தம் என்று கருதாமல், உடல்வலு, நிருவாகத்திறன் மற்றும் சமூக மதிப்புகள் வெளிப்படுத்தும் பணிகளில் வாய்ப்பளிக்கப் பட வேண்டும்.

வேலைக்குச் செல்லும் குடும்பத்தலைவிகளுக்கு வசதியான வேலை நேரம், பகுதிநேர வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். பிரசவகால விடுப்புகள் போன்றவை கட்டாயமாக்கப்பட வேண்டும்.

வேலையிடத்தில் தேவையான அடிப்படை வசதிகள் போக்குவரத்து வசதிகள் மற்றும் குழந்தைகள் காப்பகம் போன்ற சிறப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதோடு அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்புகளும் பெருக்கப்பட வேண்டும்.

பொதுவாக பெண்களின் வேலைவாய்பை அதிகப்படுத்தும் வகையில் அவர்களுக்கான தொழில் சார்ந்த கல்வி மற்றும் பிற பயிற்சி வாய்ப்புகளை அதிகப்படுத்துவதோடு வேலையிலிருந்தவாறே தகுதிகளைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்புகளும் உருவாக்கப்பட வேண்டும்.

## சமுதாயம் மற்றும் அதனைச் சார்ந்த அமைப்புகள்

வீட்டில் குடும்பத்தில் நிலவும் சூழ்நிலைகளில், புறச் சமூகம் தலையிடுவதைப் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆனாலும் பெண்களின் கூட்டுச் சக்தியினை வலியுறுத்தும் வகையில் குடும்பப் பெண் களை அங்கத்தினராய்க் கொண்டு அல்லது பெண்களுக்காக இயங்கும் சமூக அமைப்புகள் செயல்படுவது அவசியம். இவை கீழ்காணும் பல்வேறு நோக்கங்களை முன்னிட்டு செயல்படலாம்.

## பெண்கள் நலம் மற்றும் ஆரோக்கியம்

- பெண்களின் தனிப்பிரச்சினைகளுக்கு ஆலோசனைக்குழு.
- பெண் கல்வி.
- தனித்திறன் வளர்ப்பு மற்றும் தன்முனைப்பு ஊக்குவிப்பு.
- குடும்ப நிருவாகம் மற்றும் குழந்தை வளர்ப்புத்திறன் மேம்பாடு.
- பெண் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரச் சுதந்திரம்.
- பொழுது போக்குகள்.
- சமூகச் சேவை.
- பெண்கள் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் சட்டரீதியான உரிமைகள்.

இத்தகைய அமைப்புகள் பல சமயம் நேரடியாக குடும்பப் பிரச்சினைகளில் தலையிட முடியாவிட்டாலும் அவர்களின் ஆக்கப்பூர்வமான பணிகளின் பிரதிபலிப்பு நிச்சயமாக குடும்பத்தில் பெண்களின் நிலையினை உயர்த்த உதவும்.

## அரசு மற்றும் அதனைச் சார்ந்த துறைகள்

பெண்கள் முன்னேற்றத்தில் அரசாங்கத்தின் முதல் முக்கிய பங்களிப்புச் சமுதாயத்தில் பெண்களின் நிலை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவது. இதற்காக மக்களின் கவனங்களை ஈர்த்து வரும் பல்வேறு ஊடக வடிவங்களைத் திறம்பட ஈடுபடுத்துவது பற்றி சிந்திக்க வேண்டும். மேலும் பெண்களின் நலத்தினை உறுதி செய்யும் சுகாதாரம் மற்றும் கல்விச் சேவைகளைப் பெருமளவில் செயல்படுத்துவதோடு பெண்களின் மேம்பாட்டிற்கென முனைப்பான திட்டங்களும் தேவையான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட வேண்டும். முத்தாய்ப்பாகப் பெண்கள் உரிமைகள் பாதுகாக்கும் நுணுக்கமான சட்டங்கள் இயற்றப்படவேண்டும்.

## குடும்பப் பெண்கள் நலத்தைப் பாதுகாப்பதில் காவல்துறையின் பங்களிப்பு

- குடும்பப் பெண்கள், தங்கள் பிரச்சினைகளில் காவல் துறையினரைத் தயக்கமின்றி நாடும் வகையில் காவல்துறையினரிடம் நம்பிக்கையும், பாதுகாப்புணர்வும் ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கென்ற விழிப்புணர்ச்சி மற்றும் கலந்துரையாடும் முகாம்கள் பள்ளிப் பருவத்திலிருந்தே மாணவிகளிடையே அறிமுகப்படுத்த வேண்டும்.
- காவல்துறை உதவி நாடிவரும் பெண்களை இழிவுபடுத்தாமல், அவமானப்படுத்தாமல் கருணையுடனும் மரியாதையுடனும் நடத்த வேண்டும்.

▼ தங்களிடம் கொண்டு வரப்படும் குடும்பப் பிரச்சினைகளில் கணவர் பெற்றோரின் உரிமை போன்ற பாரம்பரிய எண்ணங்களுக்குக் கட்டுப்படாமல் பெண்கள் தரப்பு நியாங்களை அங்கீகரிக்க வேண்டும்.

✤ எல்லாவற்றிக்கும் மேலாக பெண்கள் சுதந்திரமாகச் செயல்பட அவர்களின் முன்னேற்றங்களுக்குத் தடையேற்படுத்தாத சட்டம் - ஒழுங்கு நிலைநாட்டப்பட்டுப் பாதுகாப்பான சமூகச் சூழலை நிலைநிருத்த வேண்டும்.

✤ பெண்கள் நாட்டின் முன்னேற்றத்தை நிர்ணயிக்க வல்லவர்கள் என்ற உறுதியான நம்பிக்கையுடன் அவர்களைப் பாதுகாக்க எல்லா வகையான முயற்சிகளையும் கையாளுதல் அவசியம்.

## பெண்ணடிமை தீர வழிகள் -எஸ்.திலகவதி -மே 2000

1. தரமான கல்வியறிவைப்பெற வேண்டும்.
2. மூட நம்பிக்கைகளிலிருந்து விடுதலை பெற வேண்டும்.
3. தானே கண்ணியமாய்ச் சம்பாதிக்கக் கூடிய தொழில் (அ) அலுவலகப்பணி ஒன்றைத் தேர்ந்து கொள்ள வேண்டும்.
4. அன்புக்கு அடிமையாகலாமே தவிர ஆணவத்திற்கு அடிபணிந்து அடிமையாய்க் கிடக்க கூடாது.
5. வரம்பு மீறிய நிலையில் தனக்கு ஏற்பட்ட கொடுமைகளை உரிய இடத்தில் சொல்லத் தயங்கக்கூடாது.
6. "கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்" என்று கருதிக்கிடக்காமல் கணவனின் செயல்பாடுகளை ஓரளவேனும் உணர வேண்டும்.
7. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவாக பல பெண்கள் குரல் கொடுக்க வேண்டும்.
8. சொத்துரிமை, பெண்ணுரிமைகளை அறிய வேண்டும்.

9. எது நேர்ந்தாலும் சுரண்டல்காரர்களின் பேராசைக்கு இணங்கக் கூடாது.

10. பெண்களை இழிவுப்படுத்திப்பேசும் கதைகளை யாரும் பேசாமல் தடுக்க வேண்டும்.

11. கற்பு இருவருக்கும் பொது என்பதை வற்புறுத்த வேண்டும்.

12. குழந்தைகளுக்குப் பெயரிடும் போழ்து தலைப்பெழுத்தாய்த் தாயின் பெயருக்குரிய எழுத்தும் இணைக்கப்பட வேண்டும்.

13. ஆண்கள் போலவே பெண்களும் தற்சார்புப் பெயர்களையே கொள்ள வேண்டும்.

14. தன்னால் இன்னொரு பெண் பாதிக்கப்படக்கூடாது என்று சத்தியம் செய்து கொள்ள வேண்டும்.

15. காதல் என்று முன் பின் ஆராயமல் ஆண்களுடன் பழகி துன்பப்படக்கூடாது.

16. மகளிர் காவல் நிலையத்தினர் எவ்வித எதிர்பார்ப்புமின்றி பெண்ணுக்குத் தீங்கிழைக்கும் எதிரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

17. பெண்களின் வாழ்க்கைப் பிரச்சனை வழக்குகளைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் முடிக்க, தனி நீதி மன்றங்கள் மாவட்டம் தோறும் அமைக்க வேண்டும்.

## பெண்கள் அதிகாரம் அடைதல்

சமூக அமைப்புகளாகிய அண்டை வீட்டுக்குழுக்கள், அண்டை வீட்டுக்கமிட்டிகள் மற்றும் சமுதாய மேம்பாட்டுச்சங்கங்கள் அமைத்து முற்றிலும் பெண்களே பங்கு பெற்று விழிப்புணர்வுடன் அந்தந்த அண்டை வீட்டுகுழுக் குடும்பங்கள் வசிக்கும்பகுதியாய் அந்தந்தப்பகுதி வாயிலாக அனைத்து வகைகளிலும் மேம்பாடடைய நகர்ப்புற ஏழைப்பெண்கள் முன்னேற செயலாற்று விதமாகவும் மைய மாநில அரசுகளின் துணையோடு இவர்கள் செயலாக்கம் புரிவதாலும் இப்பெண்கள் அதிகாரம் பெறுகின்றனர்.

தன்னுடைய பணிகளைத்தாங்களே செய்து கொள்வதன் வாயிலாகவும், தத்தம் பகுதிகளில் தாங்களே முன்னின்று அப்பணியில் நேரடியாய்ப் பங்கேற்பதன் வாயிலாகவும் அப்பணிகளை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதன் வாயிலாகவும் பெண்கள் போதிய அதிகாரம் சமூகத்தில் அடைந்துள்ளனர். இந்த அதிகாரம் சமுதாய மேம்பாட்டுணர்வை வளர்க்க பெரிதும் துணை புரிந்தது.

## தமக்கு தாமே கற்பித்தல்

உலகில், எந்த பாகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினாலும் பெண்களின் எழுத்தறிவு கல்வியைப்பொறுத்தே அவர்களின் ஆரோக்கியம், கல்வி மற்றும் குடும்பநலன் ஆகியவை உள்ளன. இதை மனதில் கொண்ட மகளிர்க்குக் கல்வியறிவு பற்றி உணரச் செய்வது அவசியமாகும்.

## எழுத்தறிவினால் விளையும் நன்மைகள்.

1. பெண்கள் மத்தியில் அதிகரித்திருக்கும் சுயமரியாதை மற்றும் சுயமதிப்பு.
2. ஆரோக்கியம், ஊட்டச்சத்து மற்றும் குடும்பநலம் குறித்த நல்விழிப்புணர்வு.
3. சமுதாய விழிப்புணர்வு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் சிறப்பான பங்கேற்பு.
4. தங்களின் சிறுதொழில்கள் மற்றும் குடும்பச் செலவுகள் பற்றிச் சரியாக கணக்கு வைக்கும் திறனில் முன்னேற்றம்.
5. குழந்தைகளின் கல்வி பற்றிய விழிப்புணர்ச்சியில் முன்னேற்றம்.

# 3. பெண்கள் மேம்பாட்டிற்கான திட்டங்கள்

## 1. பிரதம மந்திரி வேலைவாய்ப்புத் திட்டம் (PMRY)

| | | |
|---|---|---|
| நோக்கம் | : | சுயதொழில் செய்து வருவோருக்குச் சிறு மற்றும் குறுந்தொழில்கள் அமைக்க வாய்ப்புகள் ஏற்படுத்தித்தருவது |
| தகுதி | : | எட்டாம் வகுப்புத் தேர்ச்சி, அரசு அங்கீகாரம் பெற்ற கல்விக்கழகத்தில் தொழிற்கல்வி, பயிற்சி, ஆண்டு வருமானம் ரூபாய் 40000. |
| | | ஒரே குடியிருப்பில் 3 ஆண்டுகள் தொடர்ந்து வசித்திருக்க வேண்டும். |
| உதவியின் வகை | : | அனைத்துப் பொருளாதார மற்றும் நடைமுறை நடவடிக்கைகள் |
| உதவி மற்றும் அதன் வரம்பு | : | கடன் ரூபாய் 2 லட்சம் (ஒருவர்) |
| | | ரூபாய் 2லட்சம் முதல் 10 லட்சம் வரை. (இரண்டு அதற்கு மேற்பட்ட நபர்கள்) |
| மானியம் | : | திட்டச் செலவில் 15 விழுக்காடு அல்லது அதிக பட்சமாக ரூபாய் 7500 |
| அணுகவேண்டிய முகவரி | : | சம்பந்தப்பட்ட மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள். |

## 2. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் (ஸ்வர்ண ஜெயந்தி சஹாரி ரோஜ்கார் யோஜனா)

| | | |
|---|---|---|
| நோக்கம் | : | வேலைத் திட்டங்கள் அமைக்க, தனிநபர் உதவி அளித்தல். |

நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (DWCUA)

திறன் உள்ள பயனீட்டாளர்களுக்கும் மற்றும் சுயதொ ழில்முனைவோருக்கும் திறன் அதிகரிப்பதற்கான நகர்பப்புற வேலைத் திட்டம்

| | | |
|---|---|---|
| தகுதி | : | நகர்ப்புறத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்கள், பெண்கள், பட்டியல் வகுப்பு மற்றும் பழங்குடி இனம் ஊனமுற்றோர்க்குச் சிறப்பு கவனஞ் செலுத்தப்படும். |
| அணுகவேண்டிய முகவரி | : | சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையாளர் |

### 3. பொன்விழா ஆண்டு கிராம சுயவேலை வேலை வாய்ப்புத் திட்டம் (SGSY)

| | | |
|---|---|---|
| தகுதி | : | கிராமப்புறத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்பவர். |
| பயன் பெறுபவர்கள் | : | தனிநபர் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள். |
| உதவிகள் மற்றும் அதன் வரம்பு | : | சுழல்நிதி ரூபாய் 25000.<br>பொருளதார கடன் ரூபாய் 3 லட்சம் |
| மானியம் | : | 1.25 லட்சம். |
| அணுகவேண்டிய முகவரி | : | சம்மந்தப்பட்ட ஊரக வளர்ச்சி முகமை ஊராட்சி அலுவலர். |

### 4. மகளிர் திட்டம் - தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் (மதி)

நோக்கம் : 1. கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழைப் பெண்களைச் சுய உதவிக் குழுக்கள் மூலம் சமூகப் பொருளாதார மேம்பாடும் சுய சார்பு தன்மையும் அடையச் செய்வது.

2. வறுமையை மகளிர் மூலம் குறைத்தல்.
3. வறுமையை அழிப்பதற்குச் சுய உதவித்தொகை குழுக்களைப் பயனுள்ள கருவியாகப் பயன்படுத்துவது.
4. இல்லாதோரை இருப்போர் ஆக்குவது.

உதவி பெறுவோர் : ஒரே பகுதியில் வசிக்கும் ஒருமித்த கருத்துடைய 12 லிருந்து 20 ஏழைப் பெண்களை உறுப்பினர்களாகச் சேர்த்து உருவாக்கப்படும் சுய உதவிக்குழு.

அணுகவேண்டிய முகவரி : அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மாவட்டத் திட்டச் செயலாக்க அலகு - தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.

## 5. ராஜராஜேஸ்வரி மகளிர் நலக் காப்பீட்டுத் திட்டம்

நோக்கம் : மகளிர் பொருளாதாரப் பாதுகாப்பு.

உதவிபெறுவோர் : 10-75 வயது வரையிலான எந்த மகளிரும் காப்பீடு பெறலாம்.

உதவியின் வகை : ஆண்டுதோறும் ரூபாய் 15 பிரீமியம்
காப்பீட்டுத் தொகை ரூபாய் 25000

அணுகவேண்டிய முகவரி : சம்பந்தப்பட்ட இந்தியப் பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள்
(தி ஓரியன்டல் இன்சுரன்ஸ், நிறுவனங்கள், யுனைடேட் இன்சூரன்ஸ்)

## 6. முதியோர், விதவை, கணவரால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை திட்டம்

| | | |
|---|---|---|
| நோக்கம் | : | முதியோர், விதவை, கணவரால் கைவிடப் பட்டோருக்கான பொருளாதாரப் பாதுகாப்பு. |
| தகுதி | : | முதியோர், விதவை, கணவரால் கைவிடப் பட்டோருக்கான சான்றிதழ். |
| உதவி | : | மாதந்தோறும் ரூபாய் 200 மற்றும் இலவச அரிசி, சேலை, வேஷ்டி. |
| அணுகவேண்டிய முகவரி | : | சம்பந்தப்பட்ட வட்டாச்சியர் அலுவலகம் |

# 4. சமூகநலத் திட்டங்கள்

## (i) தமிழக அரசு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

தகுதிகள் :

1. தாய்க்கு 35 வயதிக்குள் இருக்க வேண்டும்.
2. வருட வருமானம் (2 குழந்தைகள் இருந்தால்) ரூ. 12000 - க்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு குழந்தை இருந்தால் ரூ. 50000-க்குள் இருக்க வேண்டும்.
3. தாய் கருத்தடை செய்யும்போது குழந்தைக்கு 1 வயதிற்குள் இருக்க வேண்டும்.
4. விண்ணப்பம் அளிக்கும்போது குழந்தையின் வயது 1-க்குள் இருக்க வேண்டும்
5. 20 ஆண்டுகள் நிறைவு அடைந்தபின் முழுமையான தொகை பெற இயலும்.

அளிக்கப்படும் உதவித் தொகை : *குறிப்பு :* இரு குழந்தையின் பெயரிலும் ஒரு குழந்தைக்கு ரூ. 15,200 வீதம் வைப்புத் தொகை ரசீதும், ஒரே குழந்தையின் பெயரில் ரூ. 22, 200 வீதம் வைப்புத் தொகை ரசீதும் வழங்கப்படும்

அணுகவேண்டிய முகவரி : சம்பந்தப்பட்ட வட்டாச்சியர் அலுவலகம், சமூக நல விரிவாக்க அலுவலர்கள், நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர், மாவட்டச் சமூக நல அலுவலர், மாவட்ட ஆட்சியர்.

## (ii) இல்வச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

தகுதிகள் :

1. 20 வயது நிறைவடைந்தும் 40 வயதிற்குட் பட்டும் இருக்க வேண்டும்.

2. விதவை, கணவனால் கைவிடப் பட்டவர் மற்றும் ஊன முற்றோர் தையல் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

3. ஆண்டு வருமானம் ரூ. 12000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| அளிக்கப்படும் உதவித் தொகை | : | தையல் இயந்திரம் (ஒன்று) |
| அணுக வேண்டிய அலுவலர் முகவரி | | ஊராட்சி ஒன்றிய ஆணையர்,<br>சமூக நல விரிவாக்க அலுவலர்கள்,<br>நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர்,<br>மாவட்டச் சமூக நல அலுவலர். |

## (iii) வெ. ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண உதவித் திட்டம்

தகுதிகள் :

1. 01-10-2001 முதல் 20 வயது நிறைவடைந்தவர்கள் (பெண்) விண்ணப்பிக்க வேண்டும்.
2. மணமகளின் தாய்க்கு 18 வயது நிறைவு பெற்ற ஆண் மகன் இருத்தல் கூடாது.
3. தந்தை இறந்ததற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.
4. பயனாளிக்குக் கல்வித்தகுதி ஏதுமில்லை.
5. திருமணத்திற்கு முன்பு விண்ணப்பம் அளிக்கப்பட வேண்டும்.
6. 20-30 வயதிற்குள் விண்ணப்பிக்கலாம்.

| | | |
|---|---|---|
| அளிக்கப்படும் உதவித் தொகை | : | ரூ. 10000 (காசோலையாக) |
| அணுக வேண்டிய அலுவலர் முகவரி | : | நகராட்சி ஒன்றிய பகுதிகளில் ஆணையர், சமூக நல விரிவாக்க அலுவலர்கள்<br>நகராட்சிப் பகுதிகளில் ஆணையர், சத்துணவு மேற்பார்வையாளர்,<br>மாவட்டச் சமூக நல அலுவலர். |

## (iv) டாக்டர். தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்

தகுதிகள் :

1. 01-01-2001 முதல் 20 வயது நிறைவு அடைந்தவர்கள் விண்ணப்பிக்க வேண்டும்.
2. திருமணம் முடிந்து 6 மாதத்திற்குள் விண்ணப்பம் அளிக்கலாம்.
3. 20-30 வயதிற்குள் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.
4. மணமகனுக்கு முதல் திருமணமாக இருத்தல் வேண்டும்.
5. வருமான வரம்பு இல்லை.

| | |
|---|---|
| அளிக்கப்படும் உதவித்தொகை | ரூ. 7000 தேசிய சேமிப்புப் பத்திரம்<br>ரூ. 3000 (காசோலையாக) |
| அணுக வேண்டிய அலுவலர் முகவரி | ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ஆணையர்,<br>சமூக நல விரிவாக்க அலுவலர்கள்,<br>நகராட்சிப் பகுதிகளில் ஆணையர்,<br>சத்துணவு மேற்பார்வையாளர்,<br>மாவட்டச் சமூக நல அலுவலர். |

## (V) தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண நிதி உதவித் தொகை

தகுதிகள் :

1. மணமகளுக்கு 20 வயது நிறைவு அடைந்திருக்க வேண்டும்.
2. திருமணம் நடைபெற்று 2 ஆண்டுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.
3. சாதிச்சான்று மணமகள் - மணமகன் இருவருக்கும் தனித் தனியாக இணைக்கப்பட வேண்டும்.
4. இருப்பிடச் சான்று அளிக்கப்பட வேண்டும். (தனித் தனியாக)
5. வருமான வரம்பு இல்லை.
6. தம்பதிகள் தமிழ்நாட்டைச் சார்ந்தவராக இருந்தல் வேண்டும்.

அளிக்கப்படும் உதவித் தொகை

1. ரூ. 10000 (தேசிய சேமிப்பு பத்திரம் ரூ. 7000 காசோலையாக ரூ. 3000)
2. ரூ. 20000 (தேசிய சேமிப்பு பத்திரம் ரூ. 10000 காசோலையாக ரூ. 10000

அணுக வேண்டிய அலுவலர் முகவரி

ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ஆணையர்,
சமூக நல வரிவாக்க அலுவலர்கள்,
நகராட்சிப் பகுதிகளில் ஆணையர்,
சத்தணவு மேற்பார்வையாளர்,
மாவட்டச் சமூக நல அலுவலர்

## (vi) அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதி உதவித் திட்டம்

| | | |
|---|---|---|
| தகுதிகள் | : | 1. மணமகள் தாய் தந்தை இருவரும் இல்லாதவராக இருக்க வேண்டும். |
| | | 2. தாய் தந்தை , இறந்ததற்கான சான்று அளிக்கப்பட வேண்டும். |
| | | 3. 20-30 வயதிற்குள் விண்ணப்பிக்கப்பட வேண்டும். |
| | | 4. கல்வித் தகுதி தேவையில்லை. |
| | | 5. பாதுகாவலர் அல்லது உறவினர்க்கு ஆண்டு வருமானம் ரூ. 12000 க்குள் இருக்க வேண்டும். |
| | | 6. திருமணத்திற்கு முன்பு 15 நாட்களுக்குள் விண்ணப்பம் அளிக்க வேண்டும். |
| அளிக்கப்படும் உதவித்தொகை | } | ரூ. 7000 தேசிய சேமிப்புப் பத்திரம்<br>ரூ. 3000 (காசோலையாக) |
| அணுக வேண்டிய அலுவலர் முகவரி | } | ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ஆணையர்,<br>சமூக நல விரிவாக்க அலுவலர்கள்,<br>நகராட்சிப் பகுதிகளில் ஆணையர்,<br>சத்துணவு மேற்பார்வையாளர்,<br>மாவட்டச் சமூக நல அலுவலர். |

## (vii) சத்யா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகம்(ம) அரசு து. பள்ளி, திண்டுக்கல்.

| | | |
|---|---|---|
| நிபந்தனைகள் மற்றும் தகுதிகள் | } : | 6-18 வயது வரையிலுள்ள ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட பெண்களின் குழந்தைகளுக்கு இலவச உணவு உடை |

மருத்துவ வசதி, உறைவிடம் அளிப்பதன் மூலம் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட சிறுவர்களுக்குக் கல்வி அளித்தல்.

1. தாய் தந்தை இல்லாததற்கான சான்று.
2. தொழு நோய் பாதிக்கப்பட்ட பெற்றோர்க்கான சான்று.
3. தாய் (அ) தந்தைக்கு (அ) பாதுகாவலருக்கு ஆண்டு வருமானம் ரூ. 12000-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
4. வேறு பள்ளிகளில் படித்தற்கான மாற்றுச் சான்று.
5. பெற்றோர்கள் இருவரும் இல்லாத குழந்தைகள் மேல் படிப்பிற்காக 22 வயதுவரை அனுமதிக்கப் படுகிறார்கள்
6. ஆயுள் கைதியின் குழந்தைகளும் சேர்க்கப்படுவர்

| | | |
|---|---|---|
| அணுக வேண்டிய அலவலர் முகவரி | : | மாவட்டச் சமூக நல அலுவலர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ஆணையர், சமூக நல விரிவாக்க அலுவலர்கள். |

## (viii) தொட்டில் குழந்தைத் திட்டம்

| | | |
|---|---|---|
| தகுதிகள் | : | மருத்துவமனைகளிலோ, தெரு ஓரத்திலோ அல்லது பொது இடங்களிலோ ஆதரவற்ற நிலையில் கைவிடப்பட்ட குழந்தைகள். |
| அளிக்கப்படும் உதவித் தொகை | : | குழந்தை யின் பொறுப்பை அரசே ஏற்கும். |
| அணுக வேண்டிய அலுவலர் முகவரி | | 1. தொட்டில் குழந்தை வரவேற்பு மையம் தலைமை மருத்துவமனை. |

2. தொட்டில் மையம், மாவட்டத்திலுள்ள அனைத்து ஆரம்பச் சுகாதார நிலையங்கள், பொது மருத்துவமனைகள்.
3. அருகில் உள்ள காவல் நிலையம்.
4. மாவட்ட ஆட்சித் தலைவர்.
5. மாவட்டச் சமூக நல அலுவலர்.
6. புகைவண்டி நிலையம், தொட்டில் மையம்.
7. காமராஜர் பேருந்து நிலையம்.
8. நகராட்சி.
9. கஸ்தூரிபா மருத்துவமனை, சின்னாளபட்டி

## (ix) குழந்தைகளைத் தத்து எடுத்தல்

**தகுதிகள்** :

1. தத்தெடுக்கும் பெற்றோர்களின் மொத்த வயது 90-க்குள் இருக்க வேண்டும்.
2. பெற்றோரில் ஒருவர் 45 வயதிற்குட் பட்டவராக இருக்க வேண்டும். இவர்கள் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளைத் தத்து எடுத்துக் கொள்ளலாம்.
3. வயதான தம்பதிகளுக்கு வயது அதிகமுள்ள குழந்தைதான் தத்துக் கொடுக்கப்படும்.
4. தனிப்பட்ட ஆணோ பெண்ணோ அல்லது முறையாக விவாகரத்துச் செய்தவர் தத்து எடுக்க விரும்பினால் அவர்களது வயது 30-ம் அதற்கு மேலும் இருக்க வேண்டும்.
5. தத்து எடுக்கும் பெற்றோர்க்கும், குழந்தைக்கும் குறைந்தது 21 வயது வேறுபாடு இருக்க வேண்டும்.
6. கல்வித் தகுதி தேவையில்லை.

7. இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் தத்து எடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்ட 1956-ன்படி தத்து எடுக்கலாம்.

8. இந்து மதத்தைச் சாராதவர் பாதுகாப்பாளர் என்ற பெயரில் தத்து எடுக்கலாம்.

9. தத்து எடுத்துக் கொள்ளும் அரசு அலுவலர்களுக்கு அலுவலங்களில் பணிபுரியும் பெண்களுக்குச் சிறப்பு தத்து விடுப்பு அளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அணுக வேண்டிய அலுவலர் முகவரி | நிருவாக அறங்காவலர்<br>கஸ்தூரிபா மருத்துவனை<br>காந்தி கிராமம் |

## (x) சிறப்புத் திட்டம் தையல் மகளிர் கூட்டறவு சங்கங்கள் மற்றும் எழுது பொருள் தயாரிப்பு, மகளிர் கூட்டுறவு சங்கம்

| | |
|---|---|
| நிபந்தனைகள் மற்றும் தகுதிகள் | சங்க உறுப்பினர்களாகச் சேருவதற்கு வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மகளிர், ஆதரவற்றவர்கள், விதவைகள், கணவனால் கைவிடப் பட்டோர் ஆகியோர் தகுதியுடையவர் ஆவர். |
| அளிக்கப்படும் உதவி | இலவசசீருடைத்திட்டத்தின்சீருடைகள் சங்கங்களின் மூலம் உறுப்பினர்களுக்குத் தைக்கும் வேலை அளிக்கப்பட்டு, அதற்கான தையற் கூலி வழங்கப்படுகிறது. எழுதுபொருள் சங்கங்கள் மூலம் உறுப்பினர்களுக்கு பைண்டிங் வேலை வழங்கப்படுகிறது. |
| அணுக வேண்டிய முகவரி | மாவட்டச் சமூக நல அலுவலர்கள். |

## குடிநீர் விநியோகம்

இயற்கையின் அமைப்பில் நாம் வாழும் பூமி மூன்றில் இரண்டு பாகம் தண்ணீரைக் கொண்டுள்ளது என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. இப்பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் தண்ணீர் இன்றியமையாதது. எனவே உலகப் பொதுமறை கண்ட திருவள்ளுவர் "நீரின்றி அமையாது உலகு" என்று தண்ணீரின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

இன்றைய சூழ்நிலையில் எங்கும் குடிநீர் பற்றாக்குறை, தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. அதற்கான காரணங்களை ஆராய்வோம்.

1. இயற்கை வளங்களான காடுகளையும், மலைகளையும் அழித்து வருவதால் மழை உருவாகும் சூழ்நிலை அரிதாகிறது.
2. குளங்கள், ஊருணிகள்; ஏரிகள் ஆகியவற்றில் தூர் வாராமல் அப்படியே விட்டுக் குப்பை கூளங்களை நிரப்புவதால் குளம் ஏரிகளில் நீர் சேமிக்க முடிவதில்லை.
3. மழைக்காலங்களில் நாம் நீரைச் சேமிக்காமல் விடுவதால் தண்ணீர் சாலைகளில் வழிந்தோடி கழிவுநீர் சாக்கடையில் கலந்து விடுகிறது.
4. ஆறு, குளம், ஏரிகளில் மனித ஆக்கிரமிப்புகள் அதிகரித்து உள்ளன.
5. அதிகரித்து வரும் மக்கள் தொகையால் தேவைக்கு ஏற்ப நீர் கிடைப்பதில்லை.
6. தொழிற்சாலைகள் அதிகரித்து வருவதால் தண்ணீரின் தேவையும் அதிகரித்து உள்ளது. ஆகையால் வாழ்க்கைக்கு இன்றியமையாத குடிநீர் அந்தந்த பகுதிகளில் முறையாக வழங்க வேண்டும் என்பது எல்லோருடைய விருப்பம்.

## சுற்றுப்புற சுகாதாரம்

சுற்றுப்புறச் சூழலில் உள்ளாட்சி அமைப்புக்களின் பங்கு:

1. நகரின் / கிராமத்தின், காற்று, தண்ணீர் மாசுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
2. சுற்றுப்புறச் சூழல் புகையினால் மாசுபடாமல் இருக்க வேண்டும்.
3. மக்களிடையே சுற்றுப் புறச்சூழல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
4. சுற்றுப்புறச் சூழலை வளப்படுத்த நகர்புறத்தைச் சுற்றி மரங்கள் வளர்க்க வேண்டும்.
5. கழிவு நீர் சாக்கடை கட்டி அதை நன்கு பராமரிக்க வேண்டும்.
6. கழிவுநீர் பாதையை மக்களைக் கொண்டே பராமரிக்க வேண்டும்.
7. சுகாதாரப் பணியாளர்களுக்குச் சுகாதாரப் பணி புனிதமானது என்று விளக்க வேண்டும்.
8. அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தர வேண்டும்.
9. நவீன முறையில் இப்பணி செய்ய அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். உதாரணம் குப்பை அள்ள போதிய கருவிகள் கைகளுக்குக் கையுறை, கால்களுக்குக் கால் உறை மற்றும் பணி முடிந்தவுடன் தன் சுத்தம் பேணல் பற்றி அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.
10. கழிவு நீர் பாதையை அடிக்கடி சுத்தம் செய்து கொசுக்கள் தங்காமல் இருக்க ஆவண செய்ய வேண்டும்.
11. கழிவு நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
12. தங்களது பகுதி சுத்தமான நகர்புறமாகப் பார்த்துக் கொள்ள குப்பைகளை அப்புறப்படுத்த சுய உதவிக் குழுக்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

13. மக்களிடையே திடக் கழிவு, திரவக்கழிவு மற்றும் பிளாஸ்ட்டிக், பேப்பர் போன்றவற்றைத் தனித்தனியாக சேகரிக்க வேண்டும்.

14. தங்கள் பகுதிக்குச் சுகாதாரப் பணியாளரை அடிக்கடி அழைத்து மக்களின் சுத்தம் சுகாதாரத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

15. இயற்கைக் கழிவுகள், இலை மற்றும் காய்கறிக் கழிவுகளைப் பயன்படுத்தி இயற்கை உரம் தயாரிக்க கற்றுத்தர வேண்டும்.

16. மண்புழு உரம் தயாரிக்க கற்றுத்தர வேண்டும்.

17. தங்களது வீட்டைச் சுற்றிப் போதிய மரம், செடி, கொடிகளை வளர்க்க ஊக்குவிக்க வேண்டும்.

18. வீட்டின் கழிவு நீரைப் பயன்படுத்தி வீட்டுத்தோட்டம் அமைக்க கற்றுத்தர வேண்டும்.

19. தங்களது வீட்டைத் தவிர அருகிலும் சுற்றுப் புறச்சூழலைப் பாதுகாக்க மக்களை விழிப்புணர்வு பெறச் செய்ய வேண்டும்.

# 5. வெற்றிக்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் பாக்கு மட்டை - மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் பார்வைக்கு...

ஜவஹர்லால் நேரு தேசிய நகரப் புனரமைப்புத் திட்டத்தில், திடக்கழிவு மேலாண்மைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து நிதி ஒதுக்கப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் அதே நேரத்தில் பிளாஸ்டிக் பை, டம்ளர் போன்றவற்றுக்கும் தடை விதிப்பது அவசியம். அப்போதுதான் மட்காத குப்பை மலைபோல் குவிவதைத் தடுக்க டுடியும். மட்காத பொருட்களைப் பயன்படுத்த அனுமதித்து விட்டுத் திடக்கழிவு மேலாண்மை செய்வது என்பது கேலிக்குரியதாகும். எனவே தொலை நோக்குடன் கூடிய இந்நடவடிக்கைக்கு மண்டலத் தலைவர்கள், கவுன்சிலர்கள் ஆதரவு தெரிவிப்பது அவசியம். மேலும் இதற்கு மாற்று ஏற்படாகப் பாக்கு மட்டையைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும். தட்டு, டம்ளர் மற்றும் பேப்பர் சணலைக் கொண்டு செய்யப்படும் பை மற்றும் கவர் பயன்படுத்துதலைக் கட்டாயமாக்கப்படவேண்டும்.

மனித உடலுக்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் எவ்வித சீர்கேடும் விளைவிக்காத பாக்கு மரப்பட்டையில் இருந்து தயாரிக்கப்படும் பொருட்கள் மக்கிப் போகும் தன்மை உடையனவாகும். கடந்த சில ஆண்டுகளாகப் பாக்கு மரப்பட்டையில் இருந்து தயாரிக்கப்படும் தட்டுகளுக்கு பொது மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. மேலும் தட்டுகள் செய்தபின் கழிக்கப்படும் சிறு பாக்கு மரப் பட்டைகளைக் கொண்டு டம்ளர் செய்ய இயலும்.

இதற்கான இயந்திரத்தை முதன் முறையாக The Aixin என்ற நிறுவனம், Single phase மின்சாரத்தைக் கொண்டு எளிதாக மகளிர் இயக்கும் வகையில் வடிவமைத்துள்ளது.

இவ்வியந்திரத்தின் மூலம் சுய உதவிக் குழுக்கள் டம்ளர்கள் தயாரித்துத் திருமண விழாக்கள், உணவகங்கள், பொது விழாக்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களில் விற்பனை செய்து நல்ல முறையில் பயனடையலாம்.

இதற்கு 100 முதல் 150 சதுர அடி பரப்புள்ள இடம் இருந்தால் போதுமானது. இந்நிறுவனமே இதற்குத் தேவையான மூலப்பொருட்களை வழங்கி, தேவையான பயிற்சியினையும் அளிக்கிறது. இதைப் பயில இரண்டு நாட்களே போதுமானது.

## பாக்கு மட்டையில் டம்ளர் செய்ய உத்தேச திட்ட மதிப்பீடு

| | |
|---|---|
| ஒரு இயந்திரத்தின் விலை (VAT உட்பட) | 23,000.00 |
| ஒரு நாளைய உற்பத்தி | 400 Nos |
| தேவைப்படும் தொழிலாளிகள் | 1 No |
| ஒரு மாதத்திற்குத் தேவையான மூலப்பொருள்கள் | 4680 .00 |
| ஒரு டம்ளர் செய்வதற்குக் கிடைக்கும் வருமானம் (0,40 P X 26 நாட்கள்) | 4160.00 |
| **மாதச் செலவுகள்** | |
| மின்சாரம் (ஒரு டம்ளருக்கு 0.02 வீதம் 26 நாட்களுக்கு) (Single Phase - III A Tariff) | 208.00 |
| கட்டிட வாடகை போக்குவரத்து மற்றும் இதர செலவுகள் | 452.00 |
| **மொத்த மாதச் செலவு** | 660.00 |

**மொத்த மாத வருமானம் ( 4160.00 - 660.00)** 3500.00

நிபந்தனைகள் :

1. இயந்திரம் பெற, 75% முன்பணம், மீதியை இயந்திரம் பெரும்பொழுது கொடுக்கவேண்டும்.
2. இயந்திரம் அளிக்க ஆகும் காலம்: முன் பணம் செலுத்திய நாள்முதல் 30 நாட்களுக்குள்
3. இயந்திரத்தை எடுத்துச் செல்லும் போக்குவரத்துச் செலவு வாங்குபவரைச் சார்ந்தது.
4. மூலப்பொருட்களுக்கு 50% முன்பணம் செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| அணுகவேண்டிய முகவரி | } | THE AIXIN 5/18, Veerakeralam, Pongaliyur Rd, Coimbatore - 641 007 Ph : 0422 - 55234666 Mobile : 93603 42009, 98430 51316 email : the aixin@ yahoo.com |

## ஆதாரம் :

1. தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கையேடு - Sponsored by Tamil Nadu Urban Development Project - II, Government of Tamil Nadu.

2. மகளிருக்கான ஆற்றல் மிகுமை : பெண்களின் பின்னணி மற்றும் சமுதாயத்தில் பெண்களின் தற்போதைய நிலை :

   மகளிரியல் மையம் & மகளிரியல் துறை அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

3. பெண்களும் - இந்திய அரசுத் திட்டங்களும் - ஒருகண்ணோட்டம், மகளிரியல் மையம், அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

5. ஊர் கூடித் தேர் இழுப்போம்! ஒன்று சேர்ந்து நீர் சேர்ப்போம்! வெளியீடு : மகளிரியல் மையம், அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம்.

6. பெண், வெளியீடு ; மாநில பள்ளிசாராக்கல்விக் கருவூலம், சென்னை.

7. முன்னேற்றப் பாதையில் நகர்ந்து கொண்டிருக்கும் பெண்கள், வெளியீடு ; கின்ஸ் பவுண்டேசன், காந்திகிராமம்.



# தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

203, அழகேசன் சாலை, சாயிபாபா காலனி, கோயம்புத்தூர் - 641 011.
தொலைபேசி : 0422 - 2441086 நிகரி : 0422 - 2457404 தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல் : tniuscbe@vsnl.net இணையம் : www.tnius.org

நந்தி அச்சகம், கோவை - 43. ☎ 2441395